
# இரகசியமாய்க் கொல்லும் இருள்



இ. இராஜேஸ்கண்ணன்

# இரகசியமாய்க் கொல்லும் இருள்

இ.இராஜேஸ்கண்ணன்

இரகசியமாய்க் கொல்லும் இருள் சிறுகதைகளின் தொகுப்பு
இ.இராஜேஸ்கண்ணன்

பதிப்புரிமை: சுனிதா இராஜேஸ்கண்ணன்

முதல்பதிப்பு: ஏப்ரல்-2015/பக்கங்கள்: xviii+82

வெளியீடு: சாத்வீகசுருதி, இமையாணன்,உடுப்பிட்டி,

யாழ்ப்பாணம்,இலங்கை /வடிவமைப்பு:தானா விஷ்ணு

அட்டை ஓவியம்: அனலியா கல்வின்கோ(ஆஜன்ரீனா)

ஒளிப்படம்: யாத்ரிகன் அச்சுப்பதிப்பு: ஆகாயம் பதிப்பகம்,

இமையாணன், உடுப்பிட்டி, யாழ்ப்பாணம்

RAKASIYAMAI KOLLUM IRUL Collection of short stories
R.Rajeshkannan

Copy right:Sunitha Rajeshkannan
First edition: April 2015/Pages:XVIII+82
Publishers:Shaathveegashruthy,Imayanan,Uduppiddy,
Jaffna, Sri Lanka/Layout:Thana Vishnu
Cover painting: Analia Calvinho/Photography:Yaathrigan/
Printing:Aakayampathippakam,Imayanan,
Uduppiddy,Jaffna

ISBN:978-955-7740-00-3
Price: 200/=

போர்தின்ற பூக்களுக்கு......

# வாழ்த்து

அழகிய நாளையை கட்டமைக்கும் காலக்கடமை யில் எங்கள் சிரேஷ்ட விரிவுரையாளர் இரா. இராஜேஸ் கண்ணனின் “இரகசியமாய் கொல்லும் இருள்” சிறுகதைத் தொகுதி புதுவரவாகின்றது; வரமாகின்றது.

அநீதியான மேலாண்மைகளுக்குள் உயிரழியும் பிஞ்சு மனங்களின் குரலாக இத் தொகுப்பின் சிறுகதைகள் யாவும் சமூகத்தின் ஆத்மாவை உலுக்கி நிற்கின்றன. நெஞ்சிலே உதிரம் கொட்ட வைக்கின்றன.

இன்று முதன்மை பெற்று வரும் பிள்ளைப் பருவத்தின் சமூகவியல் (Sociology of Childhood), உள சமூகப் பணி (Psycho Social Work) ஆகியன எங்கள் சமூகத்தில் உரியவாறு ஆழ வேர்விட இத்தகைய படைப்புக்கள் பெரும் துணையாகும்.

இலக்கியப் படைப்பாளியான இராஜேஸ்கண்ணனின் வரவால் சமூகவியலும் சமூகவியலாளனான இராஜேஸ் கண்ணனால் எங்கள் படைப்புலகமும் காணுகின்ற பெரும்பயனாய் இவை பெருமை சேர்க்கின்றன.

கண்ணனுக்குள் வியாபகமான சமூக நீதிக்கான பெருமனதின் வெளிச்சத்திலே வெளிப்படும் “இரகசியமாய்க் கொல்லும் இருள்” தொலைக்கும் பெரும் பயணத்தில் பங்காளிகளாவோம்.

எல்லையிலாத என் அன்பு வாழ்த்துக்கள்.

சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்
முன்னாள் துணைவேந்தர்
தலைவர் – சமூகவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# அணிந்துரை

"மேலான மனிதன் அறம் பற்றி யோசிக்கி றான். கீழான மனிதன் சுகம் பற்றி யோசிக்கி றான்" என்றார் கொன்பூசியஸ். இந்த உலகில் அறம் நிலைக்க வேண்டும் என்று யோசித்து வேறு எதுவும் செய்ய முடியாமல் பேனாவைக் கையில் எடுப்பவர்கள்தான் எழுத்தாளர்கள். காசுக்காக எதையும் எழுதலாம் என்று நினைக்கும் ஒரு சிலரைத் தவிர!

இ. இராஜேஸ்கண்ணன் அவர்களின் "இரகசியமாய்க் கொல்லும் இருள்" என்ற சிறுகதைத் தொகுதியைப் படித்து முடிக்கிற போது மனமெங்கும் ஒரு கனம் தோன்று கிறது. எண்ணங்கள் வேகம் வேகமாய் ஓடிவந்து இதயத்தை நிரப்புகின்றன.

2006ம் ஆண்டுக்குப் பிறகு எமது பிரதேசத்தில் என்ன என்ன நல்ல விடயங்கள் நடந்தன என்பது எனக்குத் தெரியாமலே போயிற்று. "பலருக்கும் அப்படித்தான்" என்று என்னோடு மற்றவர்களையும் சேர்த்துப் "பொதுமைப்படுத்திக்" கொள்வதில் ஒரு

மனநிம்மதி ஏற்படுகிறது. "பொதுமைப்படுத்தல்" (Generalization) என்பதே ஒரு அறிகைக் குழப்பம் என்பதும் எனக்கு நன்கு தெரியும்.

இ.இராஜேஸ்கண்ணன் என்ற இளம் (?) எழுத்தாளரை ஜீவநதியிலும், ஞானத்திலும் மல்லிகையிலும் அவ்வப்போது பார்த்தது உண்மை. கொழும்பில் வாழ்ந்த காலத்தில், அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த மூன்று வருட காலத்தில் அதுவும் சாத்தியமற்றுப் போயிற்று. நங்கூரம், தாமரை போன்றவற்றைப் பார்ப்பது எட்டாக்கனியாயிற்று. இங்கிருந்து "ஈமெயில்" அனுப்பியவர்களும் இங்கு நடந்த கறுப்புப் பக்கங்களை விபரித்திருந்தார்களே தவிர யார் யாரரெல்லாம் நல்ல கதை எழுதுகிறார்கள், நல்ல கவிதை எழுதுகிறார்கள் என்பதை யாருமே எழுதவில்லை. அதனால் இ.இராஜேஸ்கண்ணன் என்ற நல்ல எழுத்தாளர் பற்றிய ஒரு முழுமையான பதிவு இப்போதுதான் எனக்குள் சிறகு விரிக்கிறது.

"துகிலுரிப்பு" என்ற கதை ஞானத்தில் வந்தபோது வாசித்தது பசுமையாக உள்ளது. "இந்தத் தலைப்பு மிக அற்புதமாக வந்து விழுந்திருக்கிறது" என்றும் "இவர் நன்றாகத்தான் எழுதுகிறார்" என்றும் மூளையின் மேற்பட்டையின் வெளிப் புறத்தில், அடிக்கடி புரட்டத்தக்க கோவைகளில் ஓரிடத்தில் சேமிக்கப்பட்டிருப்பதை மீட்ட முடிகிறது.

2014ம் ஆண்டு தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம் 'மீண்டும் தொடங்கும் மிடுக்கென' தனது செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தை மையப்படுத்திச் செயற்பட முற்பட்ட வேளையில் "சிறுகதைப் பட்டறை" ஒன்றை நடத்தும் முடிவை மத்திய குழு எடுத்தபோது சிறுகதை பற்றிப் பேசுபவர்கள் யார் யார் என்று கலந்துரையாடப்பட்டது. "வழக்க மேளங்கள்" ஞாபகத்திற்கு வந்தன. புதுக்கச்சேரி கேட்கும் விருப்பத்தை முன்மொழிந்தது நான்தான். வழக்க மேளங்ககளும் எல்லாம் ஊரில் இல்லை.

கூட்டம் "உச்" கொட்டக் கூடியதாகப் பேசக்கூடிய யாழ்ப்பாண இலக்கிய சமூகம், உலர்ந்த மனங்களைக் குளிர்விக்கக் கூடிய மனித வளச் சோலை, போர் அரக்கனின் பிடியில் சிக்கி முதுகெலும்பே இல்லாமல் ஒழிந்து போய்க்கிடக்கிறது. இறந்து போனதும், வெளிநாடு போனதும், கொழும்பு போனதும், வயது போனதும், நோய்வாய்ப்பட்டதும் என்ற கழித்தல் முடிய எஞ்சியது ஒன்றிரண்டுதான். இராஜேஸ்கண்ணனின் பெயரைச் சிபாரிசு செய்தது எனது மாணவன் ம.பா.மகாலிங்கசிவம். "புதுமுகம் என்றாலும் தரம் குறைந்துவிடக் கூடாது" என்று நான் எச்சரிக்கையானபோது, "குறையாது ரீச்சர்" என்று உறுதிப் படுத்திய சிவத்தின் மீது நான் கொண்டிருந்த நம்பிக்கையால் இராஜேஸ்கண்ணன் "சிறுகதை ஆக்கக் கொள்கைகள்" பற்றிப் பேசவந்தார்.

பல்கலைக்கழகக்காரரர் என்றால் பெரும்பாலும் எதுவும் ஆயத்தம் செய்யாது வந்து அந்த நேரம் "வாய்க்கு வந்ததைக்" கொட்டிவிட்டுப் போவார்கள் என்ற எனது மற்றுமொரு "பொதுமைப் படுத்தல்" கருத்தை முற்றிலும் பொய்யாக்கி, நன்றாக ஆயத்தம் செய்த, மிகத் தெளிவான, சரியான பேச்சு ஒன்றை அவர் நிகழ்த்தி முடித்தபோது, அவரது சிறுகதையை வாசித்ததால் ஏற்பட்டிருந்த மதிப்புத் திடீரென உயர்ந்து கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்தது. "இலக்கிய சமூகத்தின் முதுகெலும்பு நிமிர்ந்து விடும்போல இருக்கிறதே" என்று குழந்தைபோல் மகிழ்ந்தேன்.

அன்று மாலை சில எழுத்தாளர்கள் தமது தெரிவு செய்யப்பட்ட சிறுகதைகளை வாசிக்க, அவை பற்றிய ஆக்க பூர்வமான கலந்துரையாடல் ஒன்று நிகழ்ந்தது. அவற்றில் மூத்த எழுத்தாளர்கள் க.சட்டநாதன், யோகேஸ்வரி சிவப்பிரகாசம் ஆகியோர் முறையே வாசித்த "அரும்பு" "என்டாலும் எனக்குப்பயம்" ஆகிய கதைகள் எமது பிரதேசச் சிறுவர்களின் "சுருங்கிப்போன" மனங்களைப் படம் பிடித்தன. 30.03.2014

இல் தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களப் தமிழ்த்தினப் போட்டியில் சிறுகதை ஆக்கத்துறையில் பங்குபெறும் மாணவர்களுக்கும் அவர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக் கும் நடத்திய கருத்தரங்கொன்றில் எனது "பிறழும் நெறிகள்" கதை வாசிக்கப்பட்டிருந்தது. அதுவும் ஒரு சிறுவனின் மனக்காயத்தைக் காட்டும் சிறுகதைதான். 2014 ஆம் ஆண்டு நாங்கள் நடத்திய சிறுகதைப் பட்டறைகளில் நடந்த விடயங்களைத் தொகுத்து நாம் வெளியிட்ட "சிறுகதை என்பது" என்ற நூலில் அமையும் நான்கு மாதிரிக் கதைகளில் மூன்று சிறுவர் உளநலத்தைக் கருப் பொருளாகக் கொண்டவை.

இராஜேஸ்கண்ணன் தனி ஒரு ஆளாக இப்போது வெளியிடுகிற "இரகசியமாய்க் கொல்லும் இருள்" என்ற சிறுகதைத் தொகுதியில் அமையும் பொரும்பாலான கதைகள் பிள்ளை மனங்களை வைத்துப் பின்னப்பட்டுள்ளன. அதற்கு அணிந்துரை எழுதுமாறு நான் கேட்கப்படுவது எனக்குத் தரப்படும் கௌரவம் என உணர்ந்துகொள்கிறேன். இப்படி ஒரு தொகுதி வருவது மிகமிக ஆரோக்கியமான விடயம் என்பதை எந்தத் தயக்கமும் இன்றி எடுத்த எடுப்பிலேயே கூறிவிடலாம்.

"ஆரோக்கியம் என்பது நோய் நிலைகளிலும் இயலாமை யிலும் இருந்து விடுபட்ட நிலை மாத்திரமல்ல, ஒருவர் தம் உடல், உள, சமூக, ஆன்மீக நன்னிலைகளில் அடையக்கூடிய அதி உயர்ந்த நிலை அது" என்று கூறும் உலக சுகாதார நிறுவனம், "ஆரோக்கியம் மனிதனது அடிப்படைப் பிறப்புரிமைகளில் ஒன்றாகும்" என்று தொடர்கிறது.

உளநலம் என்ற அடிப்படைப் பிறப்புரிமையைச் சிறுவர் களுக்கு வழங்க முடியாத பாவப்பட்ட இனமாக நாம் கடந்த 25 - 30 வருடங்களாக இருந்து வந்துள்ளோம். சிறுவர்களின் உளநலம் பாதிக்கப்படுமிடத்து அவர்களின் உடல் நலத்திலும் சமூக ஆன்மிக நலங்களிலும் பல கோளாறுகள் ஏற்படும் என்பதை

அறியாதவர்களாகவே பெரும்பான்மையான பெற்றோர்களும் ஆசிரியர்களும் அதிபர்களும் உள்ளனர். இவ்விடயம் தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் உரைகள் வழங்குவதைவிட அல்லது கட்டுரைகள் எழுதுவதைவிடக் கலை இலக்கிய வடிவங்கள் ஊடாக இந்த உண்மை சொல்லப்படும்போது அது மனித மனங்களை ஆழத்தொட்டு அதிக பயனை ஏற்படுத்தும் என்ற கருத்து அறிஞர்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் தெரிந்த தாயினும் அதைச் செய்வதற்குரிய வளப்பற்றாக்குறை எமது பிரதேசத்தில் நிறையவே உள்ளது. செய்யக்கூடிய திறனும் ஆற்றலும் உள்ளவர்களும் "எனக்கென்ன, உனக்கென்ன" என்று ஒருவகையான சுயநல வட்டத்தினுள் ஆழ்ந்து போய்விட்ட அவலம் நேர்ந்துவிட்டது.

"சிறுவர் உளநலம் பற்றிய சிறுகதைகளை எழுதுங்கள்" என்ற கோரிக்கையை பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்கள் 1990களின் பிற்பகுதியில் இருந்து தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்தார். அப்போதிருந்த எனது வேலைப்பழு என்னை அதைச் செய்யவிடவில்லை. என்றாலும் உளநலம் பற்றிய அறிவு ஓரளவேனும் கொண்ட வேறு பலரிடம் அந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு அந்த நோக்கோடு எழுதப்பட்ட கதைகளைச் செம்மையாக்கம் செய்து நான் கொழும்பில் வசித்த காலப்பகுதியில் "மனதைக் கழுவும் மகாசமர்த்தர்கள்" (2008) என்ற தொகுப்பாக வெளியிட்டிருந்தேன். மணிமேகலைப் பிரசுரமாக இந்தியாவில் அச்சுவாகனம் ஏறிய அந்நூல் ஏராளமான எழுத்துப் பிழைகளோடு வந்து எனக்கு மனநிறைவைத் தர மறுத்து மூலையில் உறங்கிப் போயிற்று. அத்தொகுதியில் என்னுடன் செல்வி, பகீரதி கணேசதுரை, சி.கதிர்காமநாதன், புவிராஜா, மயூரன், சுதர்சினி ஆகியோர் எழுதியிருந்தனர். இந்த முயற்சியை இப்போது சாந்திகம் ஞாயிறு வலம்புரிப் பத்திரிகை ஊடாக மற்றொரு வடிவத்தில் முன்னெடுக்கின்றது.

இந்த வட்டத்திற்கு வெளியே நின்று தனி ஒருவராகச் "சிறுவர் உளநலம்" தொடர்பான ஒரு சிறுகதைத் தொகுதியை வெளியிடும் முதல் நபர் என்ற கவனிப்பை இராஜேஸ்கண்ணன் பெறுகிறார். இதைப் பார்த்தபோது "அல்வாத்துண்டுகள் எனை நோக்கி எறியப்படும்" உணர்வை நான் பெற்றேன் என்பது மறக்க முடியாத உண்மை.

வெற்றிகளைப் பாராட்டுவது எவ்வளவு அவசியமோ அதேயளவு அவசியம் முயற்சிகளைப் பாராட்டுவது என்று உளவியளார்கள் கூறுவர். இராஜேஸ்கண்ணனுடைய இந்தத் தனி முயற்சி மிகவும் பாராட்டப்படக் கூடியது என்று கூறுவதில் எந்த மிகையுமில்லை. இப்போதெல்லாம் எமது சமூகத்தில் ஒருவரது முயற்சியை மனம் திறந்து பாராட்டுவதும், ஒருவரை அவரோடு ஒப்புநோக்கி வளர்ச்சியை விதந்துரைப்பதும் குறைந்து வருகிறது. ஒரு பிள்ளை சென்ற தவணை ஒரு பாடத்தில் 75 புள்ளி எடுத்திருந்தது. இம்முறை அதே பாடத்தில் 85 எடுத்திருக்கிறது. "நீ சென்ற முறையைவிட 10 புள்ளி அதிகமாக எடுத்திருக்கிறாய். நிறையவே முன்னேறி இருக்கிறாய்" என்று சொல்ல வேண்டும். அதுதான் நேர்மீள வலியுறுத்தி நடத்தை முன்னேற்றத்தைக் கொண்டுவரும் சரியான முறை. "அவனால் 100 புள்ளி எடுக்க முடியுமானால் உன்னால் ஏன் முடியாது?" என்று கேட்கும் பெற்றோரையும் ஆசிரியரையும் என்ன செய்யலாம்? "ஸ்கொலசிப் பாஸ்பண்ணாவிட்டால் வீட்டிற்குப் போகமுடியாது" என்ற நிலையில் இருக்கும் ஒரு பிள்ளையப் பற்றி இராஜேஸ்கண்ணன் எழுதுகிறார். பிள்ளைகள் பல்வேறு மெய்ப்பாட்டு முறைப் பாடுகளோடு உளவளத் துணையாளர்கள் முன்வந்து நிற்கிறார்கள். பிள்ளைக்கா பெற்றாருக்கா உளவளத்துணை தேவை?

பாராட்டுக்குப் பஞ்சமான ஒரு நிலை இலக்கிய உலகிலும் கலை உலகிலும் இருக்கிறது. "இவர் இந்தத் தொகுதியை

வெளியிடுவதே பாராட்டுக்குரியது. வேறு பல இளைஞர்கள் சமூகத்தைச் சீரழிக்கும் வேலைகளில் நேரத்தைச் செலவிடும் போது, ஒருவர் சிறுகதை, கவிதை, நாவல் எழுதுகிறார். இசை, நடனம், நாடகம் செய்கிறார் என்றால் அதுவே பாராட்டப்பட வேண்டியதுதான். 2004 இல் எழுதிய "தூவானம்" கதையைவிட 2008 இல் எழுதிய "துகிலுரிப்பு" நன்றாக இருக்கிறது. 2011 இல் எழுதிய "இரகசியமாய்க் கொல்லும் இருள்" இன்னும் மிகச் சிறப்பாக இருக்கிறது என்றால் கட்டாயம் பாராட்டித்தான் ஆகவேண்டும் என்று சொன்னால், "இவர்கள் மாறி மாறி முதுகு சொறிகிறார்கள்" என்று சிலர் முணுமுணுக்கத் தொடங்கி விடுகிறார்கள். இளைப்பாறும் வயதை அடைந்துவிட்ட எனக்கு இராஜேஸ்கண்ணன் பதவி உயர்வு பெற்றுத்தரப்போகிறார் என்று நான் எதிர்பார்க்காத வரையில் போரில் போய்விட்ட எங்கள் தெல்லிப்பழை வீட்டைத் திருப்பிக் கட்டுவதற்கான வீட்டுத்திட்ட உதவிக்குக் கையெழுத்து வைக்கிறவர் இராஜேஸ்கண்ணன் இல்லை என்று எனக்குத் தெரிந்திருக்கிற வரையில் "இது முதுகுசொறியும் வேலை" என்று புறுபுறுப்பவர்களைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. நல்ல உளநலம் உள்ளவர்கள் பாராட்ட வேண்டிய விடயங்களை எந்த எதிர்பார்ப்புமின்றி மனம் திறந்து பாராட்டுவார்கள் என்பதுதான் எனக்குத் தெரிந்த உண்மை. நல்ல விடயத்தைச் செய்யத் தொடங்குகிற ஒருவரைத் தொடக்கத்திலேயே "அடித்து இருத்திவிடுவதே" பாவங்களில் மிகப் பெரிய பாவம் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

"பக்கக் கட்டுப்பாடு தங்களை எல்லைப்படுத்தாது" என்று இராஜேஸ்கண்ணன் குறிப்பிட்டதால் கொல்லை பூராகவும் மாட்டை இழுத்துக் கொண்டு செல்கிறேன். கடைசியில் எப்படியும் மாட்டைக் கொண்டு வந்து மரத்தில் கட்டத்தானே வேண்டும்?

உண்மையில் இராஜேஸ்கண்ணன் நன்றாகவே எழுதுகிறார். சிறுகதை வரலாறு நீண்டது, தமிழ்ச் சிறுகதை பல

உச்சங்களைத் தொட்டது. அதற்காக இனி எழுதப்படும் சிறுகதைகள் எல்லாம் அந்த உச்சங்களோடுதான் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்று வாதிட முடியாது. ஒலிம்பிக்கில் ஒரு உலக சாதனை இருக்கிறது என்பதற்காக அதற்குப்பின் ஒருவரும் நூறுமீற்றர் ஓட்டம் ஓடாதுவிட்டு விடுவதில்லையே! விட்டுவிட வேண்டும் என்று விவாதிக்க முடியுமா? நாங்கள் எப்படி எழுதினாலும் எங்களைவிடச் சிறப்பாக எழுதுகிறவர்கள் சிலர் இருக்கத்தான் செய்வார்கள். அதற்காக எழுதாமல் இருக்க வேண்டியதில்லை. எழுதாது இருப்பவர்களை விட எழுதுகிற வர்கள் மேலானவர்கள். கட்டுரைகள், அறிவியல் விடயங்கள் எழுதுகிறவர்களை விட ஆக்க இலக்கியம் செய்பவர்கள் மேலானவர்கள் அவ்வளவும் யாரும் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். இதற்கு மேல் இராஜேஸ்கண்ணனின் சிறு கதைகள் எப்படி இருக்கின்றன என்று பார்ப்போம்.

சிறுகதை ஒரு மையக் கருத்தை அல்லது நம்பிக்கையைக் கொண்டிருக்கும் அதுதான் அதன் கருப்பொருள். "ஒரு ஆசிரியரின் நீதியற்ற நடத்தை ஒரு பிள்ளையின் மனதைப் பெருமளவு பாதிக்கும்" என்பது துகிலுரிப்பு கதையின் கருப்பொருள். சிறுகதையில் ஒரு மைய முரண் இருக்கும். அந்த மைய முரணின் ஒருபக்கத்தில் பிரதான பாத்திரம் இருக்கும். மறுபக்கத்தில் இன்னொரு பாத்திரமோ, இயற்கையோ, அழகோ அல்லது பிரதான பாத்திரத்தின் உணர்வுகளோ, உடல் நோயோ இவற்றில் சிலவோ இருக்கலாம். வாசக்கட்டியில் வாசக்கட்டி பிரதான பாத்திரம் என்றால் அவனுடைய தாயும், சமூகமும் எதிரணியில் இருக்கின்றன. மைய முரணோடு தொடர்புபட்டு வரும் நிகழ்வுகளின் தொடர்ச்சியும், பாத்திரங்களின் செயற்பாடும் கதையின் நடையாகும். கதையின் நடை அழகாக வருவதில் மொழியும் கணிசமான செல்வாக்குச் செலுத்தும். "தொலைந்த முகங்கள்

ஒன்றும் வியப்பானவையல்ல இருந்த முகங்கள்தான் இன்னும் வியப்பானவை" போன்ற வசனங்களில் ஒரு கலைஞன் ஒளித்திருப்பது பளிச்சிடுகிறது. கதைக்களம், கட்டிடங்கள், காட்சிகள், பருவகாலங்கள், காலநிலை, நிலத்தோற்றம் என்று எதையும் கொண்டு ஸ்திரப்படுத்தலாம். "சுமப்பவர்கள்" கதையின் களமான பஸ் ஓரிரு வசனங்களில் நிலை நிறுத்தப்பட்டுவிடுகிறது. சிறுகதையின் இந்த ஐந்து அடிப்படை மூலகங்கள் பற்றிய தெளிவு இவரிடம் இருப்பதில் ஐயமில்லை.

இதற்கு அப்பால் மிகச் சிறந்த சிறுகதைகளில் வாசகனின் பொழுதை உயர்மட்ட ரசனையில் காலூன்றி நிற்கச் செய்து அழைத்துச் செல்லும் பாங்கும், உயர்தரச் சுய ஆக்கத்திறனும் இருக்கும். "இரகசியமாய்க் கொல்லும் இருள்" கதை இந்த அம்சங்களைப் பூர்த்தி செய்வதாகவே நான் கருதுகிறேன். இத்தொகுதியில் உள்ள கதைகளில் மிகச் சிறந்தது அதுதான் என்பதால் எழுத்தாளரின் நூல் தலைப்புத் தெரிவுடன் எனக்கும் உடன்பாடு உள்ளது. அந்தக் கதையின் விபரிப்புக் கலைத்துவம் நிறைந்ததாய் உள்ளது. "கரும்பூதமான இருள் தன் பிள்ளைகளை மென்று தின்றுவிடக் கதவின் இடுக்கின்வழியே அறையினுள் நுழைய முற்படுவதாக உணர்ந்தான். பழைய சாக்கு ஒன்றை எடுத்துக் கதவுக்கும் நிலத்துக்கும் இடையிலான மெல்லிய இடைவெளியை மறைத்துக் கொண்டான்" என்று கூறும் வரிகள் பாத்திரத்தின் உளநலம் குறைந்த எண்ணம், நடத்தை ஆகியவற்றைப் பறைசாற்றும் அழகு தனித்துவமானது. இருள் தேளாகவும் பாம்பாகவும் மாறுகிறது. யதார்த்தமான கதையின் இடையில் யதார்த்த மீறலாக வரும் இந்த இருள் காட்சி கதைக்கு ஒரு அலாதி அழகைத் தருகிறது. ஆனாலும் அந்த இருள் அவனைத்தான் அதிகம் பாதிக்கிறது. அது "இனிமேல் பிள்ளைகளைப் பாதிக்கும்" என்று இராஜேஸ்கண்ணன் குறிப்பால் உணர்ந்திருக்கிறார் என்று நினைக்கிறேன்.

"சொல்லை எடுத்தருமை ஓவியம் செய்தாய்" என்று கம்பனைப் பற்றிய கவிதை ஒன்றில் சோ.ப.எழுதுவார். நல்ல இலக்கியங்கள் சொற்களைக் காண்பியங்கள் ஆக்கிவிடும். நல்ல சிறுகதை ஒன்றை வாசிக்கும்போது காட்சிகள் எம் மனக் கண்ணில் ஓடி ஒரு நாடகம் நடத்தும். "வாசக்கட்டி" அதற்குச் சிறந்த உதாரணமாகிறது. கிராமத்துக்கே உரிய வெள்ளை மனம் கொண்ட சிறுவனின் கதை அதன் மண்வாசனை மணத்தால் மேலும் அழகு பெறுகிறது. மஞ்சள் சன்லைட்கட்டி உடுப்புக் குத்தான் போடுவார்கள் என்று நம்பியிருந்த எனக்குச் சில கிராமங்களில் அதைப் போட்டுக் குளிப்பார்கள் என்பது இப்போதுதான் தெரிகிறது. வாசக்கட்டியின் மன எண்ண ஓட்ட விபரிப்பு நன்றாக வந்துள்ளது. வாசக்கட்டியின் அம்மா அவனைப் போட்டு அடி அடி என்று அடித்துவிட்டு அன்று இரவு காலில் கிடந்த தழும்புகளுக்கெல்லாம் நல்லெண்ணெய் தடவுகிறார். தனது மகனைக் "கள்ளன்" என்று மற்றவர் சொல்லக் கேட்டபோது அவவுக்குக் கோபம் வந்தது. வந்தவுடன் அடித்துவிட்டார். பிறகுதான் அப்படிக் கடுமையாக அடிக்குமளவுக்கு அவன் பெரிய குற்றம் எதுவும் செய்யவில்லை என்று தோன்றுகிறது. மனம் குற்ற உணர்வுக்குள் போகிறது. அதனால் தழும்புக்கு நல்லெண்ணெய் தடவுகிறார். இந்தக் குற்ற உணர்வின் பின் அவவுக்கு ஒரு பதகளிப்பும் வரலாம். இப்படி ஒரு உணர்விலிருந்து மற்றொரு உணர்வு சுற்றுவதை "உணர்வு எல்லை அனுபவம்" (meta emotional experience) என்று கூறுவார்." கதையை வாசித்து முடிக்கிறபோது அந்த "சோப்" வாசம் எமக்கும் மணப்பது போன்ற ஒரு கற்பனை விரிகிறது.

சில நல்ல சிறுகதைகள் தெளிவான உணர்வுக் குவியத்தைக் கொண்டு வந்து நிறுத்தும். இளகிய மனம் கொண்ட மாதவி ரீச்சர் பிள்ளையுடன் ஆத்மார்த்தமான பிணைப்பு ஏற்படுத்தி எம்மை அந்த உணர்வுக் குவியத்தின் அழைத்துச்

செல்கின்றனர். ஆயினும் மாதவி ரீச்சர் பாத்திரத்திற்குப் பிரச்சினையைத் தீர்க்கத் தெரியவில்லை. உளவியளாளர்கள் கூறும் பிரிவுபடுதல் நிலைக்கு வந்து (dissociation) மயங்கி விழத்தான் முடிகிறது. எமது அனுதாபத்தைப் பெற்றுக் கொள்கிற நல்ல பாத்திரப் படைப்பு "என்ன செய்யலாம்" என்ற கேள்வியை எம்மிடம் விட்டுச் செல்லும் கதை. மற்றவர் மனதை நோகடிப்பதையே தொழிலாகக் கொண்ட சாவித்திரி ரீச்சர் போன்ற பாத்திரங்களை நேர்க்கணிய முறையில் கையாளத் தெரிந்த வல்லமையான மனம் அதிபருக்கு இருந்திருந்தால் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கும் என்று வாசகனின் அறிவு மனம் பேசுகிறது.

சில தனித்துவமான உள்ளீடுகள் ஒரு கதையைச் சிறப்பாக்கி விடுவதுண்டு. தூவானம் கதையில் சஞ்சீவனின் மன உணர்வைக் காட்டும் கனவு அப்படியான ஒன்று. உளவியல் அறிவு மிகுந்தவர்கள்தான் அப்படி எழுத முடியும் என்பதுபோல் அந்தக் கனவு வந்து அமைந்திருப்பது சிறப்புத்தான்.

வாசகர்கள் பலருக்கும் அனுபவமான அல்லது பொருத்த மான ஒரு விடயம் பொருளாகிறபோது அந்தக் கதை வெற்றிபெறும் வாய்ப்பு அதிகம். அது ஓர் உலகப் பொதுமையான கருப்பொருளாக இருந்தால் இன்னும் விசேடமாகும். பெரியதோர் அனர்த்தம் முடிந்து திரும்பவும் பாடசாலைக்கு வருகிற யாவருக்கும் வரக் கூடிய ஒரு அனுபவத்தைப் பூக்கள் கதை தருகிறது. அக்கதையில் வரும் ஆசிரியர் பாத்திரம் நன்கு பயிற்றப்பட்ட உள வளத்துணை ஆசிரியர் போல நடந்து கொள்கிறது. குழந்தைகள் என்ற பூமாலைகள் எங்கள் கண்ணீர் மாலைகளை இழுத்து வந்து விடுகின்றன. "வாழ்வு நந்திக் கடலில்" கொட்டப்பட்ட போது அவன் மூன்றாம் தரத்தில் படித்துக் கொண்டிருந்தான்" என்று வாசிக்கிறபோது ஒரு கவிதானுபவம் ஏற்படுவதும் சுகம் தருகிறது.

"இப்படி இருந்தால் என்ன நடக்கும்?" என்ற கேள்வியின் பின்னணியில் எழுந்த மற்றொரு நல்ல கதை சுமப்பவர்கள்,

கச்சான் விற்கும் சிறிசுகளை எழுத்தாளர் மிகுந்த அவதானத்துடன் நோக்கியுள்ளமை தெரிகிறது. “எங்களுக்கு இரக்கப்பட வேண்டாம்“ என்று மீதிப்பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் தருணத்தில் சாரங்கன் என்ற பாத்திரம் எம் மனங்களில் உயர்ந்து விடுகிறான்” தாயை இழந்தாலும் அவன் தன் காலில் நிற்பான்” என்று முடிவை உய்த்துணர விரும்புகிறது உள்ளம். மரணம் நம் வரவேற் பறையில் எப்போதும் காத்திருக்கும் விருந்தாளியாக இருந்த ஒரு காலகட்டத்தின் சிறுவர்கள் பற்றிய இத்தொகுப்பு ஓ.ஹென்றி, ஸ்ரீபன்கிறேன், ஜாக் லண்டன், மார்க்ரூவெயின் எட்கார் அலன்போ போன்றவர்களின் கதைகளோடு ஒப்பிடலாமோ என்ற கேள்வியை விடுத்து, எம் முற்றத்துக்கு வந்த நல்ல தமிழ்ப் பூக்காடு என்பதை ஏற்றுக்கொள்வது பொருத்தமானது என்று நம்புகிறேன்.

கலாபூஷணம் திருமதி.கோகிலா மகேந்திரன்<br>
கே.கே.எஸ்.வீதி<br>
கோண்டாவில் மேற்கு<br>
கோண்டாவில்.<br>
08.02.2015

# முன்னீடாய்ச் சில வார்த்தைகள்

I

இலக்கியத்தின் கலானுபவத்தைக் கடந்து அதன் சமூகப் பயன் குறித்துச் சிந்திப்பவர்களிடையேயும் நோக்குநிலை வேறுபாடுகள் பல உள்ளன. கலை இலக்கியங்களைச் சமுதாய ஆற்றுப்படுத்தலுக்கான உயிர்ப்புமிக்க கருவிகளாக; ஊடகங்களாக உபயோகப் படுத்த முடியும் என்ற அடிப்படையானதொரு நம்பிக்கை இந்தச் சமூகப் பயன் நோக்கினுள் உள்ளமைந்துள்ளது. இந்த நோக்கு திட்டமிடப்படாமல் தன்வழியே இலக்கி யங்களில் வந்தமைந்து விடுகின்றது. இது எந்தக் காலத்து இலக்கியங்களுக்கும் பொருந்தும். காட்டாற் றைப் போலக் கரைபுரண்டோடும் சமுதாய வாழ் வினைத் திசைவழிப்படுத்தும் பொறுப்பு இலக்கியங் களுக்கும் உண்டு. இந்தத் திசைவழிப்படுத்தல் மனித சமூகத்தின் “நலவாழ்வுக்கு“ வழிசமைக்கும்.

நலவாழ்வு பற்றிய சிந்தனைகள் வியாபாரப் பொருளாகவும், கருத்திட்டப் பொருளாகவும் ஆகிவிட்ட இந்நாளில் கலை இலக்கியவாதிகள் இது பற்றி

ஆழச்சிந்திக்கவேண்டிய அவசியம் எழுந்துள்ளது. நீண்ட காலமாக யுத்தங்களையும் அதுசார்ந்த அனர்த்தங் களையும் சந்தித்து, தாங்கித் தரித்து வந்த ஒரு சமூகத்தினை ஒத்தடம் கொடுத்து ஆற்றுப்படுத்த வேண்டிய பொறுப்பை உணரவேண்டிய நிலையில் நாம் உள்ளோம்.

போரின் கொடுஞ் சுவாலையால் எரிந்துபோன மனிதர்கள் மீட்கப்பட முடியாதவர்கள். ஆனால் வாடிப் போனவர்கள் உயிர்ப்பிக்கப்பட வேண்டியவர்கள். இவ்வாறு வாடிப்போன துளிர்களே இந்தச் சிறுகதைத் தொகுதியில் வரும் கதைகளின் பாத்திரங்கள். இந்தத் தொகுப்பில் வரும் ஐந்து சிறுகதைகள் போர் தின்ற பூக்களின் வாழ்வோடு தொடர்பு டையன. மூன்று கதைகள் சிறார்களின் கல்வி உலகோடும் பள்ளி வாழ்வோடும் தொடர்புடையன. ஒன்று மட்டும் பிள்ளைப் பருவ ஆசைகள் நிராசைகள் மீதான சமூகப் பிரதிபலிப்பைப் பேசுகின்றது. எது எவ்வாறாயினும் இந்தத் தொகுப்பில் எஞ்சி நிற்பது பிள்ளை மனங்கள் மீதான சமூகத்தின் அழுத்தங்களே.

பிள்ளைகளின் மனம் பூப்போன்றது; மிருதுவானது; மிகை சுமை தாங்காதது; உள்ளூறும் இனிய உணர்வுகளால் இன்பமளிப்பது. பிள்ளைகளின் அகவுலகம் அற்புதமானது. அவர்களால் தமக்கென ஒரு புறவுலகினை இலகுவில் கட்டியமைக்க முடிவதில்லை. ஏற்கனவே பெரியவர்களால் - மூத்தவர்களால் - கட்டமைக்கப்பட்ட சமூக உலகில் வாழத் தலைப்படுகின்றனர். பேராசை, அந்தஸ்து வேட்கை, குரோதம், மோகம், ஏற்றத் தாழ்வு, போலி கௌரவம், ஒடுக்குமுறைகள், வன்முறைகள் முதலிய பல எதிர்நிலைப் பொருண்மைகளின் ஆதிக்கம் சமூக உலகில் மலிந்துகிடக்கின்றது. இவை சிறார்களின் அற்புத அகவுலகினை ஆக்கிரமிப்புச் செய்கின்றன; ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்த ஆதிக்கம் அவர்களை "மிகையாய்ச் சுமக்கும்" நிலைக்குத் தள்ளிவிடுகின்றது.

மிகையாயச் சுமப்பவர்களின் அகவுலகம் அழுத்தங்களால் நிறைகின்றது. அழுத்தங்களோடும் சுமைகளோடும் வளரும் பிள்ளைகளால் தமக்கான மகிழ்வளிக்கும் புறவுலகினை எதிர்காலத்தில் எவ்வாறு கட்டியமைத்துக்கொள்ள இயலும்? இது ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய விடயம். இந்தச் சிந்தனைக்கான ஓர் ஒளிப்பொட்டினையேனும் இந்தத் தொகுப்பிலுள்ள சிறுகதைகள் தருமாயின் அதுவே அவற்றின் வெற்றி என்பேன்.

முதுசொமாக(2002), தொலையும் பொக்கிஷங்கள் (2009) ஆகிய எனது சிறுகதைத் தொகுதிகளின் வரவுக்குப் பின்னே நான் எழுதிய சிறுகதைகள் பல உதிரியாகக் கிடந்தன. அவை பல்வேறு பொருள்களைப் பேசின. அக் கதைகளில் சில "சிறுவர் உளநலம்" பற்றித் தனித்துப் பேசின; அவை என்னுடனும் பேசிக்கொண்டன. இத் தொகுப்பில் உள்ளடங்கும் முதல் ஆறு சிறுகதைகளையும் தனித்துத் தேர்ந்தெடுத்த போது முகிழ்த்து வந்த மையப் பொருளோடு இசைந்ததாக நான் 2009 இற்கு முன்னர் எழுதிய மேலும் மூன்று சிறுகதைகளை இணைத்துக் கொண்டேன். இந்த ஒன்பது கதைகளையும் ஒருசேரப் படிக்கும்போது "ஊடுபாவாக" சிறுவர் உளநலம் தொடர்பான சிந்தனை வெளிப்பட்டு நின்றது. இது ஒரு தனித்தொகுப்பாக வெளிவரவேண்டியதன் சமூகப் பயன்பாட்டினை என்னளவில் உணரமுடிந்தது; இந்தத் தொகுப்பு சாத்தியமாயிற்று. இத் தொகுப்பின் ஊடுபாவான பொருளால் 2009இற்குப் பின்னர் எழுதப்பட்ட இன்னும் சில சிறுகதைகளை உதிரியாகவே விட்டுவிட வேண்டியதாயிற்று.

இலக்கியத்தின் வாயிலாக மனித உளவியலைப் பேசலாம். இலக்கிய விமர்சனங்கள் உளவியல் பின்புலத்துடன் நிகழ்ந்து வருகின்றன. இத்தகைய இலக்கியச் சூழலில் போரின் பின்னான சமூகம் ஒன்றின் பிள்ளைப் பருவத்து உளவியலை மையப்படுத்தியதாக இச் சிறுகதைகளைப் படைப்பாக்கம் செய்ய

முடிந்தமை நிறைவினைத் தருகின்றது. இதனைக் கருதித்தான் உள ஆற்றுப்படுத்தல், உளவளத்துறை சார்ந்த வகையில் எமது சமூகத்தின் பல முகங்களிலும் சேவையாற்றிவரும் எழுத்தாளர் கலாபூஷணம் கோகிலா மகேந்திரன் அவர்களின் அணிந்துரை யுடன் இத் தொகுப்பு வெளிவருகின்றது. அணிந் துரை வாயிலாக என் கதைகளை ஆழத்தரிசித்த அவர்களுக்கு மதிப்புடன் கூடிய என் நன்றி. என்னை வாழ்த்தி நிற்கும் உயர்வில் உறுதுணை யாகும் என் ஆசான் சமூகவியல் சிரேஷ்ட பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்கள் நன்றிக்குரியவர். இந்தத் தொகுப்பு முயற்சிக்கான ஆலோசனைகளை வழங்கிய நண்பன் இ.சு.முரளீதரன், க.பரணீதரன் ஆகியோருக்கு நன்றியுடையேன். இந்த நூலின் வடிவமைப்பு, அச்சாக்கத்தினை செய்த ஆகாயம் பதிப்பகம் தானா விஷ்ணு மற்றும் அட்டைக்கான ஒளிப்படம் தந்த கவிஞர் யாத்ரிகன் ஆகியோரின் பங்கு நன்றிக்குரியது. இச் சிறுகதை களை அவ்வப்போது பிரசுரித்திருந்த ஜீவநதி, ஞானம், நங்கூரம், தாமரை, திருவுடையாள் ஆகிய சஞ்சிகைகளுக்கு என்றும் நன்றிக்குரியவன். என் படைப்புக்களின் முதல் வாசகியும் விமர்சகியுமான என் துணைவி சுனிதாவுக்கு நன்றி.

என்றும் என் படைப்பாக்க முயற்சிகளுக்கு ஆதர வளிக்கும் வாசகர்களின் தகுந்த விமர்சனங்களை எதிர்பார்த்து என் முயற்சி தொடர்வேன்.

என்றும் அன்புடன்

**இ.இராஜேஸ்கண்ணன்.**

**"சாத்வீக பிரஸ்தம்"**
**இமையாணன் கிழக்கு,**
**உடுப்பிட்டி,**
**யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

**இரகசியமாய்க் கொல்லும் இருள்** சிறுகதைகளின் தொகுப்பு
இ.இராஜேஸ்கண்ணன்

இன்று முதன்மை பெற்று வரும்
பிள்ளைப் பருவத்தின் சமூகவியல், உள
சமூகப்பணி ஆகியன எங்கள் சமூகத்தில் உரியவாறு
ஆழ வேர்விட இத்தகைய படைப்புக்கள் பெரும் துணையாகும்.


01. வாசக்கட்டி 01 - 10

02. சுமப்பவர்கள் 11 - 22

03. பூக்கள் 23- 30

04. தலைவிதிப்படி 31 - 40

05. நீண்டதூரம் 41 - 47

06. இரகசியமாய்க் கொல்லும் இருள் 48-53

07. துகிலுரிப்பு 54-65

08. மானக்கேடு 66-74

09. தூவானம் 75-82

# வாசக்கட்டி

01

என்னை எல்லாரும் அப்பிடிச் சொல்லச் சொல்ல வெட்கமாயிருக் கும். என்ரை மனம் அட்டை போலச் சுருண்டு போகும். அவமானமாயிருக் கும்.

கொஞ்சக்காலம் பள்ளிக்கூடம் 'ரியூசன்' வகுப்பு; ஏன் ஊரிலை கூட என்னை எல்லாரும் நக்கல் பண்ணிக் கூப்பிடுவினம். எனக்குச் சரியான கவலை. அப்பிடி நக்கல் பண்ணுற வைக்கு என்ரை மனம்படுகிற பாட் டைத் தெரியுமே?

சில நேரங்களிலை நான் அம்மா வோடை சந்தைக்குக் கடைகளுக்குப் போய் வரேக்கை கூப்பிடுவினம். அந்த நேரத்திலை எனக்குக் கவலைவராது. கோபம்தான் வரும். ஒருநாள் அப்பிடிக் கூப்பிட்ட ஒருதனுக்குக் கல்லெடுத்து விசுக்கிவிட்டன். கல்லு அவன்ரை நெத்தியிலை பட்டு ரத்தம் வழிஞ்சுது. அது பிறகு பெரிய பிரச்சினையாகி அவன்ரை வீட்டுக்காறர் விளக்கத்துக்கு

வந்திட்டுதுகள். அம்மாவுக்குப் பிறகும் அவமானமாய்ப் போச்சுது. அண்டு அம்மா எனக்குச் சொன்னா.

"அப்பன்... ஆரெண்டாலும் எதுவும் பழிக்கட்டும். நீ ஆத்திரப்படக்கூடாது. ஊராக்கள் உப்பிடித்தான் உனக்குத் தெரியும் தானே. நீ தெரியாத வயதிலைதானே செய்தனி. நீ அம்மாவுக்காகத்தானே அதைச் செய்தனி. பின்னை ஏன் ஆத்திரப்படுறாய். ஆர் உன்னை நக்கல் பண்ணினாலும் உன்ரை பாட்டிலை போ. காதுக்கு எடுக்காதை..."

அம்மா இப்படி ஒண்டுக்குப் பத்துத்தரம் சொல்லிப் போட்டா.

இப்ப எல்லாம் நான் ஆர் அப்பிடிக் கூப்பிட்டாலும் கோபப்படுறதும் இல்லை; கவலைப்படுறதுமில்லை. ஆனால், இவ்வளவு காலம் கடந்துபோயும் என்னை நக்கல் பண்ணுறது மட்டும் குறையேல்லை.

நான் ஆறு வயசிலை செய்த ஒண்டை இதுகள் இன்னும் மறக்காமல் சொல்லிக் கொண்டிருக்குதுகள்.

சிலபேருக்கு என்ரை உண்மையான பெயர் 'சந்துரு' எண்டது தெரியுமோ தெரியாது.... ஆனால், இந்தப் பட்டப் பெயர் நல்லாத் தெரியும்.

இண்டைக்குக் கூட என்ரை மனம் நான் செய்தது களவு எண்டு நினைக்குதில்லை.

"இந்த வயசிலை இப்பிடிச் சின்னச் சின்னக் களவுகளைச் செய்யவிட்டால் பின்னடிக்குப் பெரிய கள்ளனா வளர்ந்து நிற்பான். பிறகு கோட்டுக்கும் சிறைக்குந்தான் திரியவேண்டிவரும்... கஸ்ரம் எண்டால்

கஞ்சியைக் குடிச்சிட்டுப் படுக்கவேணும். பிள்ளையைக் களவெடுத்துத் திரிய விடக்கூடாது..."

இப்பிடித்தான் அம்மாவைக் கேளாத கேள்வி கேட்டு அவமானப்படுத்தினவ தேவி அன்ரி.

அம்மாவுக்கு வேறை வழியில்லை. பாவம் என்னைப் போட்டு அடி அடியெண்டு அடிச்சா. நானும் அழுது கத்தினன். அதைப் பார்த்து என்ரை தங்கச்சிமார் ரண்டு பேரும் வீரிட்டு அழுததுகள்.

"கொப்பன் இருந்தால் இப்பிடி ஊரார் வந்து விசாரணை வைப்பினமே? உங்களுக்கு என்ன குறை விட்டனான் நான்? உப்பிடி ஏன் செய்யிறியள்? இனிமேல்பட்டு உப்பிடிச் செய்வியே சொல்லு... ஆற்றையும் சாமானுகளிலை தொடுவியோ?"

அம்மா கேட்டுக்கேட்டு அடிபோட்டா. இது வரைக்கும் முதலும் கடைசியுமாக அம்மா எனக்கு அடிச்சது அண்டைக்குத் தான்.

அடிஅடியெண்டு அடிச்சுப்போட்டு அண்டு இரவு காலிலை கிடந்த தழும்புகளுக்கெல்லாம் நல்லெண்ணை தடவிவிட்டுக்கொண்டு அம்மா சொன்னது இப்பவும் என்ரை காதிலை கேக்கிற மாதிரிக் கிடக்கு.

"அப்பன்... சந்துரு... அப்பா இல்லாமல் வளருற பிள்ளையப்பு நீ. தங்கச்சியளும் இருக்கினம். நாங்கள் கஸ்ரப்பட்டு உழைச்சுத்தான் வாழுகிறம். காசு வைச்சிருக்கிற ஆக்கள் தாங்கள் விரும்பினதெல்லாம் வாங்குவினம். உனக்கும் அது வேணும் இது வேணுமெண்டு ஆசை வரும். வந்தால் அம்மாவைக்

கேள். அம்மா ஏலுமான அளவுக்கு வாங்கித் தருவன். அப்பிடி இல்லாட்டில் நீ படிச்சுப் பெரியாளா வந்து உழைச்சு வாங்கித்தா... என்ன?... மற்றவேன்ரை பொருளை எடுக்கக்கூடாது. நீ ஆசையிலை தொட்டுப் பார்க்கிறாயெண்டுகூட நினைக்காயினம். கஸ்ரப் பட்டவை எண்டதாலை கள்ளன் எண்டு சொல்லுவினம். இனி உப்பிடிச் செய்யாதை. என்ன?..."

எனக்கு ஆசை வாறதுதான். ஆனால், நான் மற்றவையின்ரை சாமானுகளை எடுக்கிறேல்லை.

பள்ளிக்கூடத்திலை என்னோடை படிக்கிற பொடியள் விதம்விதமான கலர் பெட்டியள், கொம்பாஸ் பெட்டியள், பேனை பென்சிலுகள் எல்லாம் கொண்டு வருவினம். எனக்குப் பார்த்தால் ஆசையாக இருக்கும். அம்மாட்டைக் கேப்பம் எண்டு நினைப்பன். பிறகு வேண்டாமெண்டு விட்டிடுவன். அது சரியான விலையாக இருக்கும். ஆனால் ஒரு நாளும் அதுகளை களவெடுக்கவேணுமெண்டு மனசிலை நினைச்சதே இல்லை. பாவம் அது. அதுகளின்ரை அம்மா அப்பா கூட கஸ்ரப்பட்டுத்தானே வாங்கிக் குடுத்திருப்பினம்.

ஏனெண்டு தெரியேல்லை. இப்பிடி ஒரு வேலையைச் செய்யப்போய் என்னை எல்லாரும் கள்ளன் மாதிரி...

எனக்கு இந்த ஆசை எப்பிடி வந்தது தெரியாது. இண்டைக்கும் மனசுக்குள்ளை பெரிய பூதம் மாதிரி நிக்குது.

முதலிலை என்னோடை படிக்கிற ஹரீஸின்ரை உடம்பிலையிருந்துதான் அந்த வாசம் வந்தது. ஹரீஸ்

எப்பவும் நல்ல வாசமா இருப்பான். அவன் வகுப்புக்கு வந்தவுடனை முதலாம், இரண்டாம் பாடம் நடக்கேக்கை வாசம் நல்லாயிருக்கும். பிறகு குறைஞ்சு போம். அதே வாசம்தான் எங்கடை வகுப்பு ரீச்சரின்ரை உடம்பிலையும் இருந்து வரும். எங்கடை ரியூஷனுக்கு பக்கத்து வீட்டிலை இருக்கிற மாமா தங்கடை வீட்டுக் கிணத்தடியிலை நிண்டு குளிக்கேக்கையும் அதே வாசம்தான் வரும்.

அந்த வாசம் எனக்கு நல்லாப் பிடிக்கும். என்ரை மூச்சோடை கலந்துவிட்டுது. எப்ப நினைச்சாலும் மணக்கிறமாதிரிக் கிடக்கு.

ஹரீஸை நான் ஒருக்கால் கேட்டனான்.

“ஹரீஸ்... என்னடா உன்ரை மேலிலை வாசம் மணக்குது. என்ன போடுறனி.”

“அதடா... 'ராணி சோப்' .
“எப்பிடியிருக்கும் அது?...”
“உனக்குத் தெரியாதே... அது சந்தனக் கலரிலை நீளமான முட்டை மாதிரி இருக்கும். பெட்டி ஒரேஞ் கலரிலை இருக்கும். பெட்டியிலை ஒரு ராணி மாதிரிப் பொம்பிளை முடி போட்டுக் கொண்டு இருப்பா...”

“எங்கை வாங்குறனி”
“அப்பாதான்... கனக்க வாங்கிவந்து அலுமாரியுக்கை அடுக்கி வைப்பார். நான் எடுத்துப் போடுவன். என்ரை 'சோப்' தனிய ஒரு 'கேசில்' இருக்கும். ஆரும் எடுத்து மாறிப் போடமாட்டினம். அப்பிடித் தான் எல்லாருக்கும் வீட்டை தனித்தனி 'கேஸ்' இருக்கு. அம்மாவும் அக்காவும் மட்டும் 'லக்ஸ்' சோப்

போடுவினம்...”

நான் எப்பவும் ஹறீஸுக்குப் பக்கத்திலை தான் இருப்பன். அவன்ரை வாசம் என்னிலையும் தொத்தினமாதிரித் தெரியும். தொத்தினால் நல்லதுதானே என்ரை உடம்பும் அவனைப்போலை வாசமாக மாறும்.

சாதனா ரீச்சர் நல்ல வடிவா சாறியுடுத்து வெளிக்கிட்டு வருவா. நல்ல வெள்ளை. படத்திலை நடிக்கிற பொம்பிளையள் மாதிரி. அவவுக்கு பயிற்சிக் கொப்பி காட்டிச் சரி பார்க்கிற நேரம் நான் பக்கத்திலை நெருக்கமா நிப்பன். ரீச்சர் ஏசமாட்டா. ஆனால் ஒரு நாள் என்னைக் கேட்டா.

“ஏனப்பன்... சந்துரு ஏன் ரீச்சரோடை ஒட்டி ஒட்டி நிக்கிறியள்...?”

“ரீச்சர்... உங்கடை உடம்பிலை ஹறீஸின்ரை உடம்பிலை வாறதைப் போலை ராணிசோப் வாசம் வருகுது. அந்த வாசம் எனக்கு பிடிக்கும் அதுதான்...”

என்ரை பதிலைக்கேட்டு ரீச்சர் பெரிசா சிரிச்சா. நானும் சிரிச்சன்.

எங்கடை ரீச்சரின்ரை மேலிலை வாற வாசத்தைப் போலை இல்லை. அம்மாவின்ரை மேலிலை அது வேறை மாதிரி.

அம்மாவின்ரை வாசமும் எனக்குப் பிடிக்கும். ஆனால் ரீச்சரின்ரை மேலின்ரை வாசம் மாதிரி இருந்தால் இன்னும் பிடிக்கும்.

பாவம் அம்மா... எப்பவும் வீட்டுக்குள்ளை இருந்து உடுப்புத் தைச்சபடி இருப்பா. எங்களுக்குச் சாப்பாடு செய்யவும் பள்ளிக்கூடம் வெளிக்கிடுத்தவும் குளிக்க வார்க்கவும் தான் எழும்புவா.

அப்பாவை வேலைக்குப் போற வழியிலை ஆரோ சுட்டவையாம். ஆள் மாறிச் சுட்டவையாம். ஆரெண்டு தெரியாது. அதுக்குப் பிறகுதான் அம்மா முழு நேரமும் தையல் மிஷினிலை இருக்கிறா. அதுக்கு முந்தி அப்பா உழைச்சுவந்து கொடுத்தவர் தானே.

எங்கடை வீட்டிலை கிணறு இல்லை. எங்கடை வீட்டிலை இருந்து ஆறுவீடு தள்ளி ராமசாமி தாத்தா வீடு. அங்கை பெரிய துலாக்கிணறு இருந்தது. கிணத்தோடையே பெரிய தொட்டியிருந்தது. அதுக்குள்ளை எந்த நேரமும் தண்ணி நிறைத்து விட்டிருப்பினம். தங்கடை தோட்டத்துக்குத் தண்ணி விடவும், அயலிலாக்கள் குளிக்கவும் அப்பிடிச் செய்திருந் தினம். நல்ல தென்னஞ்சோலை வீடு. குளிக்கிற இடத் திலை வெயிலும் பிடிக்காது. அம்மா எங்கள் மூண்டு பேரையும் அங்கை கொண்டு போய்த்தான் குளிக்க வார்ப்பா.

அம்மா ஒரு மஞ்சள் கட்டி சவுக்காரமும் ஒரு நீலக்கட்டி சவுக்காரமும் ஒரு 'கேசிலை' வைச்சிருப்பா.

மஞ்சள் கட்டியைச் சுத்திவந்த 'கவரிலை' 'சன்லைட்' என்று எழுதியிருக்கும். நீலக்கட்டி சுத்திவந்த 'கவரிலை' 'மில்க்வைட்' என்று எழுதியிருக்கும். மஞ்சள் கட்டியை 'நைலோன்' நூலாலை சுற்றி இழுத்து இரண்டு துண்டா வெட்டி, ஒரு துண்டைக் கேசிலையும் மற்றதை வீட்டிலும் வைப்பா. மஞ்சள் கட்டியை குளிக்கவெண்டு

சொல்லுவா. நீலக்கட்டியை எங்கடை உடுப்புகளுக்கும் தன்ரை உடுப்புக்கும் போட்டு கழுவுவா.

அதே மஞ்சள் கட்டியை தேவி அன்ரி முழுசா ஒரு 'கேசிலை' வைச்சிருந்து உடுப்புத் தோய்க்கிற கல்லிலை வைச்சு தன்ரை உடுப்பு தோச்சதை நான் கண்டிருக்கிறன். தேவி அன்ரியும் ராமசாமி தாத்தா வீட்டைதான் குளிக்க வருவா. அவை வீட்டையும் கிணறு இல்லையாம்.

ஒரு நாள் ராமசாமித் தாத்தா வீட்டை குளிச்சுக் கொண்டு நிக்கேக்கை தேவி அன்ரியும் குளிச்சா. அவ எப்பவும் போலை ரண்டு 'கேசோடை' தான் வந்திருந்தா. ஒண்டுக்குள்ளை மஞ்சள் கட்டி. மற்றதுக்குள்ளை ஹரீஸ் சொன்னது போல நீளமுட்டை முழுக்கட்டி ராணி சோப் ஒண்டும் பாவிச்ச குறை நீளமுட்டை கட்டி ஒண்டும் இருந்தது.

அம்மா எனக்கு குளிக்க வாத்துவிட்டு வீட்டை போகச் சொல்லிவிட்டு தன்னுடைய பாவாடைகளுக்கு நீலக்கட்டி போட்டு தோய்க்கக் கல்லடிக்குப் போனா.

துலாவிலை தண்ணி இறைப்பதிலை கவனமா நிண்டா தேவி அன்ரி.

எனக்கு இதயம் 'பக் பக்' எண்டு அடிக்கத் தொடங்கிவிட்டுது. தேவி அன்ரியையும் திறந்து வைத்திருந்த ராணி சோப் 'கேசையும்' மாறிமாறிப் பார்த்தேன். உடம்பெல்லாம் ரத்தம் 'பாஸ்ரா' ஓடிச்சுது. தேவி அன்ரி தண்ணி அள்ளுறதிலை கவனமா நிண்டா. 'டக்' கெண்டு ராணி சோப் குறைக்கட்டியை காகம் பாட்டியின்ரை வடையெடுத்த வேகத்திலை எடுத்துக் கொண்டு எங்கடை வீட்டை நோக்கி ஓடினன்.

மேலெல்லாம் நடுங்கிற மாதிரிக் கிடந்தது.

இந்தக் குறைக்கட்டியை குடுத்து நாளைக்கு அம்மாவைப் போடச் சொல்லவேணும். ஆரும் போட்டதைப் போடக்கூடாது எண்டு அம்மா சொன்னால், ஆகக் கடைசி அம்மாவின்ரை பாவாடை சட்டைக்கு போட்டாதல் தோய்க்கச் சொல்லுவம். அம்மா அடிக்கிறாவோ தெரியாது. ஏன் ஆற்றையும் சாமானை எடுத்தனி எண்டு.

அந்தக் குறை ராணிசோப் வாசக்கட்டியை ஒரு பூவரசமிலையிலை மடிச்சு தையல் மிஷினிலை ஏறி நிண்டுகொண்டு அப்பாவின்ரை படத்தட்டிலை அப்பாவுக்குப் பின்னாலை ஒழிச்சுவைச்சன். பின்னேரம் போலை அம்மாவுக்குச் சொல்லுவம் எண்டு நினைச்சன். பிறகு கள்ளப்புத்தி வேலை செய்தது.

காகம் கொண்டுவந்து போட்டுவிட்டுப் போனது எண்டு சொல்லுவம் எண்டு நினைச்சன்.

அப்பாவுக்குப் பின்னாலை இருந்த குறை வாசக்கட்டியின்ரை மணம் வீட்டுக்குள்ளை எல்லாம் பரவுற மாதிரிக் கிடந்தது. எனக்கு முகிலுக்கு மேலை பறக்கிறதுபோலை கிடந்தது.

அண்டு பின்னேரத்தைக் காத்துக் கொண்டிருந்த எனக்கு அண்டுதான் அந்தப் 'பட்டம்' கிடைத்தது. அது ஆக்களுக்கு என்ரை பேரை மறக்கச் செய்துபோட்டுது.

"டேய்... வாசக்கட்டி"
சாரங்கன் கூப்பிட்டுக்கொண்டு என்னைத் தாண்டி ஓடுகிறான்.

குனிஞ்சு கல்லொண்டை எடுத்தன். அவனை எறிஞ்சு முறிக்கத்தான். அம்மா சொன்னது ஞாபகம் வந்தது,

"கஸ்ரப்பட்டவை எண்டதாலை கள்ளன் எண்டு சொல்லுவினம்"

எடுத்த கல்லு என்ரை கையிலிருந்து நழுவி விழுந்தது.

02

# சுமப்பவர்கள்

சாரங்களைப் பார்த்து மூன்று வாரங்கள் கடந்துவிட்டன. என்னாகி விட்டது அவனுக்கு. வழமையாக அவன் பேருந்து ஏறும் இடத்திலும், இறங்கிச் சென்று வியாபாரம் செய்யக் கடைவிரிக்கும் இடத்திலும் பேருந்து தரித்து மீண்டும் புறப்படும் வரையுள்ள தருணங்களில் கண்களால் அவனைத் தேடுவதே கடந்த மூன்று வாரங்களில் ஒரு வேலையாகிவிட்டது எனக்கு.

அவனது பிஞ்சுச் சகோதரி படிக்கும் பாடசாலைக்கு முன்னேதான் அவன் கடைவிரிப்பது வழக்கம். அந்தப் பாடசாலையின் வாசலில் பறக்கும் வெள்ளையுடை அணிந்த சிட்டுகளிடையே அவனது சகோதரி சாகித்யாவையும் தேடிப்பார்ப்பது வழமையாகி விட்டது.

இதயத்துக்கு நெருக்கமான

இரண்டு உறவுகள் என்னைப் பிரிந்து போய்விட்ட கனதி என்னுள் இறங்கி அழுத்தியது. நாளாந்த, வாராந்தப் பேரூந்துப் பயணிகளிலெல்லாம் எத்தனை மனிதர்கள்...! சிலர் காதோடு கலந்திருப்பர் வேறு சிலர் கண்ணோடு கரைந்திருப்பர், வெகுசிலரே இதயத்தில் இசைந்திருப்பர். வாழ்வின் ஒரு வகைமாதிரியாய் ஒவ்வொரு பேரூந்துப் பயணங்களும் நீளும்.

சாரங்கனும் சாகித்யாவும் இதயத்தில் இசைந்து விட்டார்கள்.

"முறிகண்டிக் கச்சான்... முறிகண்டிக்கச்சான்... அங்கை வாங்கினாலென்ன, இங்கை வாங்கினாலென்ன... அதே கச்சான்தான். தம்பியிட்டை வாங்குங்கோ... தரமான கச்சான். ஒண்டெண்டால் இருவது... மூன்டெண்டால் ஐம்பது..."

சாரங்கனை முதன்முதலில் பேரூந்தினுள் கண்டபோது அவன் கூவிய இந்த வார்த்தைகளை, யாழ்ப்பாணத்திலிருந்து கனகராயன் குளத்துக்கு இடம்மாற்றலாகிச் சென்றதிலிருந்து கடந்த இரண்டு வருடங்களாகக் கேட்டுவருபவன் நான்.

திங்கட்கிழமைகளில் காலையில் யாழ்ப்பா ணத்தில் இருந்து கனகராயன் குளத்துக்கு நான் போகும் அதே பேரூந்தில் தவறாமல் அவனும் தனது தங்கையுடன் ஏ-9 வீதியில் பனிக்கர் குளப்பகுதியில் இருந்து ஏறிவருவான். தங்கையின் பாடசாலைக்கு முன்பாக உள்ள பேரூந்துத் தரிப்பிடத்தில் அவர்கள் இருவரும் இறங்கும் வரை கச்சான் விற்பதில் கண்ணும் கருத்துமாய் இருப்பான். வெள்ளி பிற்பகலில் நான் ஊருக்குத்

திரும்பும் போதும் அதே பேருந்தில் அவர்களைப் பார்க்க முடியும். இரண்டொரு முறை அலுவலக வேலைகளுக் காக வார இறுதி நாட்களில் சென்று வரும்போது கூட தங்கை உடன் இல்லாது தனியே அவனைப் பார்த்தி ருக்கிறேன். 'இந்தப் பிஞ்சுவயதில் யார் இவன் கைகளில் வாழ்வின் சுமையைத் திணித்தார்கள்? இவனுக்கு ஒரு பன்னிரண்டு பதின்மூன்று வயதிருக்கும். தங்கைக்கு ஒரு ஏழெட்டு இருக்கும். ஏன் இந்தச் சுமை?

பல முறை என்னுள் மிதப்பெடுத்த கேள்விதான். ஆனால், இதுவரை விடைகாண முடியவில்லை. வினாக் களாய் தொக்கிய வாழ்வுடன் தான் எத்தனை மனிதர்கள் எம்மிடையே!

சாரங்கனின் பெயரை நான் அறிந்து கொண்ட தருணம் என் மனதில் இன்றும் பசுமையாக நிறைந்துள்ளது.

அன்றும் வழமைபோல பேருந்தின் இரண்டு புறத்து இருக்கைகளின் நடுவே நின்றவர்களைத் துளைத்துக் கொண்டு கூவியபடி என்னருகே வந்தான். அருகே தங்கையும் பாடசாலைச் சீருடையுடன் அழகாய் நின்றாள்.

"தம்பி எனக்குக் கச்சான் தா அப்பு!" என்று கூறியபடி ஐம்பது ரூபாய்த் தாளை நீட்டினேன். அவன் மூன்று பொதிகள் கச்சானை எடுத்து என்னிடம் நீட்டினான்.

"தம்பி எனக்கு ஒண்டு போதும் அப்பு. மிச்சத்தை வையுங்கோ" என்றேன்.

அவன் ஒன்றை என் கையில் திணித்து விட்டு

மீதிப்பணம் முப்பது ரூபாயை என்னிடம் நீட்டினான்.

"அது இருக்கட்டுக்கும் மிச்சக்காசு வேண்டாம், தங்கைச்சிக்குக் கொப்பி வாங்க வைச்சிருங்கோ" என்று கூறி ஒரு பெரிய உதவி செய்துவிட்டதாக என்னுள் மகிழ்ந்த ஒரு மின்னல் கீற்றுத் தருணத்தில்

"சேர் இந்தாங்கோ மிச்சக்காசு. தங்கைச்சிக்குக் கொப்பி வாங்கத்தானே நான் கச்சான் விக்கிறன். நீங்கள் வாங்கின கச்சானுக்குக் காசு தந்தால் போதும். எங்களைப் பாவம் எண்டு இரக்கப்படுகிறியள் போலை" என்று கூறி மீதிப்பணத்தை என் கையில் திணித்துவிட்டுச் சிரித்தான்.

"தம்பி உங்கடை பேரென்ன?..."

"நான் சாரங்கன். தங்கச்சி சாகித்யா..."

இந்த விசாரிப்புடன் அன்று நிறுத்திக் கொண்டேன். அந்தச் சிறுவனின் மனவுறுதியை எண்ணி வியந்து கொண்டேன்.

அண்மைக்காலமாகப் பேரூந்துகளில் உதவி கோரி வருபவர்களிலும் அதிகம் சிறுபிள்ளைகளைக் காணமுடிகின்றது. மருத்துவச்சான்றிதழ் காண்பித்து, குடும்பப் புகைப்படம் காட்டி, தமது உடற்காயங்களைக் காட்டி எத்தனை எத்தனை பிள்ளைகள் கை நீட்டி வருகின்றார்கள். நெஞ்சு வெடித்து விடும் போல இருக்கும். அவர்களிடையே சாரங்கன் வித்தியாச மானவன்தான்.

என்னுள் சாரங்கன் சாகித்யா பற்றி ஆழமாக அறிந்து கொள்ளும் ஆர்வம் வலுப்பெறத்தொடங்கியது.

"இவர்களின் பெற்றோர் எங்கே? ஏன் இந்தச்

சிறுவன் தங்கையைக் கூட்டிச் சென்று வருகின்றான்? தங்கையைப் படிக்கவைக்கக் கூட்டிச்செல்லும் இவன் பாடசாலைக்கு ஏன் செல்வதில்லை?" வினாக்கள் ஒன்றன்பின் ஒன்றாய் மனதை அரித்தன.

அன்று நான் பேருந்தின் முற்பக்க இருக்கையில் அமர்ந்திருக்கிறேன். வழமையாக அவன் ஏறும் இடத்திலிருந்து ஏறுகின்றான். பேருந்தின் பின்புறத்தே வழமையான கூவல். வியாபாரத்தில் அமளியாக இருந்தான். அவனது முதுகுப்புற சட்டையைப் பிடித்தபடி தங்கை இழுபட்டு வந்து கொண்டிருந்தாள். அன்று பேருந்தில் பயணிகள் சற்றுக் குறைவு என்பதால் வியாபாரம் வேகமாக முடிந்துவிட்டது. அவன் என்னருகே வந்தான். சாரங்கன் இறங்க இன்னும் சிறிது தூரம் இருந்தது.

கழுத்தை சுற்றிப் போடப்பட்ட வார் ஒன்றில் 'பிளாஸ்ரிக்' கூடை ஒன்றைப் பொருத்தி, அதனுள்ளே கச்சான் சரைகளை அழகாக அடுக்கி, மற்றக் கையில் நீளமாகத் தொங்கும் பை ஒன்றினுள் சொரியலான கச்சானும் அளவுப் பேணியும். பழுத்த நிறத்தில் காற்சட்டை, கருநீலத்தில் ஒரு 'ரீசேட்', தலையில் ஒரு துணித் தொப்பி, பேருந்தின் வேகத்தினால் அலைப்புற்ற உடலை முன்னேயிருந்த கம்பியுடன் இறுகப்பற்றி அணைத்து நின்றான். தங்கை சாகித்யா அவன் பின்னே அல்லாடிக் கொண்டு நின்றாள்.

"சாரங்கன், மாமாவுக்கு ஒரு கச்சான் தாங்கோ அப்பு"

அவன் கச்சான் எடுக்கும் வேளை தங்கை

பிடிதளர்ந்து விழப்போகும் தறுவாயில் அவளை எட்டிப்பிடித்தேன்.

"சாகித்யா மாமாவோடை இருங்கோ என்ன? இறங்கேக்கை அண்ணாவோடை போகலாம்"

பேருந்து வேகமாகப் பறந்தது. அவள் எனது கால்களிடையே பாதுகாப்பாக முன் இருக்கையை பிடித்தபடி நின்றாள்.

கச்சான் மணிகளை உடைத்து வாயிலே போட்டுக் கொண்டேன்.

சாரங்கன் என்னை வாஞ்சையோடு பார்த்துச் சிரித்தான். அவனை மெதுவாக என்னருகே அழைத்தேன்.

"அப்பன் சாரங்கன்! தங்கைச்சி எத்தனையாம் வகுப்பு படிக்கிறா?"

"ரண்டு"

"நீங்கள் பள்ளிக்கூடம் போறதில்லைப் போல"

"ஓம் ஏழாம் வகுப்பிலை வந்து விட்டிட்டன்"

"ஏன் விட்டனீங்கள்?"

"சண்டைக்குப்பிறகு"

"தங்கச்சி நல்லாப் படிக்கிறாவா?"

"ஓமோம் நல்லாப்படிப்பா. இந்தமுறை இரண்டாம் பிள்ளை. கெட்டிக்காரி" அவனது கண்ணில் திடீரென ஒரு ஒளி.

"தங்கச்சியை பள்ளிகூடத்திலை விட்டிட்டு

முடியும் வரைக்கும் காவல் நிக்கிறனியளாக்கும் ?"

"ஓ அவள் படிச்சிட்டு வாறதுக்கிடையில் கச்சான் எல்லாத்தையும் எப்பிடியும் வித்து முடிச்சிடுவன். அப்பிடியில்லாட்டில் மிச்சத்தைத் திரும்பி வாற பஸ்ஸிலை விப்பன்."

"உங்கடை வீடு எங்கையிருக்கு?"

"நாங்கள் நிண்டு ஏறுற இடத்தைக் கண்டிருப்பியள் தானே. அதிலை இருந்து உள்ளுக்குப் போற செம்மண்வீதியிலை மூண்டு கட்டை போக வேணும்."

"வீட்டை ஆரார் எல்லாம் இருக்கினம்..?" என்னுடைய மனம் தயங்கியது.

"அம்மா இருக்கிறா சேர்" அனாயாசமாய் வந்தது பதில்.

"வேறை ஆர் இருக்கினம்?"

"....................."

கீழ் உதட்டைப் பிதுக்கினான்

"அம்மா உங்களோடை வியாபாரத்துக்கு வாறதில்லையோ?"

"அம்மா நடக்கமாட்டா"

"சாரங்கனுக்குப் பள்ளிக்கூடம் போக ஆசையில் லையோ?"

"ஆசை தான் சேர். நான் வியாபாரத்துக்குப் போனால்தானே தங்கச்சி படிக்கலாம்."

“அம்மா வீட்டை என்ன செய்வா?”

“கச்சான் வறுப்பா. நாங்கள் திரும்பிப் போறவரைக்கும் காவலிருப்பா...”

பெரிய மனித தோரணையுடன் பதில் சொல்லிக் கொண்டிருந்தான். அவர்கள் இறங்கிச் செல்லும் பாடசாலை வாயிலில் பேரூந்து நின்றது.

“சாகித்யா நல்லாப் படிக்கவேணும் என்ன ?”

சொல்லியபடி அவளை தமையனின் பின்னே மெதுவாக அனுப்பி வைத்தேன்.

என்னுள் எழுந்த வினாக்கள் சில விடை காணாது மனத்திடை அங்கலாய்த்துக் கொண்டன.

அதற்குப் பின்னர் சாரங்கனுக்கு நான் வாடிக்கைக் காரனாகிவிட்டேன். அவனுக்குப் பணங்கொடுப்பதற்குக் கச்சான் வாங்குவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. ஊருக்குத் திரும்பும் தருணங்களில் கொஞ்சம் அதிகமாகவே அவனிடம் கச்சான் வாங்கிச் செல்வது வழமையானது.

“மாமா என்ன போனகிழமை ஆளைக் காணேல்லை”

“மாமா... இண்டைக்கு வீட்டுக்குக் கச்சான் தாறதோ?”

“மாமா என்ன இண்டைக்கு சீற் கிடைக்கேல் லைப் போலை”.

இப்படியெல்லாம் என்னை விசாரிக்குமளவுக்கு 'சேர்' என்பது 'மாமா' ஆகிவிட்டது. பேரூந்துப்

பயணத்தில் நெஞ்சுக்கு நெருக்கமான இரண்டு மருமக்கள் கிடைத்த உணர்வு. மூன்று வாரங்களாக வியாபாரமில்லாமல் சாரங்கன் என்ன செய்வான்? தங்கை சாகித்யாவின் பசிக்கு என்ன வழிதேடுவான்?.... எனது மனம் அலைகழிந்து கொண்டிருந்தது.

இன்றைக்கு அலுவலக நேரத்தை முடித்துக் கொண்டு, பிஞ்சுகள் பேரூந்து ஏறும் இடத்திற்கு வந்து ஒருக்கால் விசாரித்துப் பார்க்க வேண்டும்.

அலுவலகத்து வேலை நேரம் இன்று மட்டும் யுகங்களாக இழுபட்டுக் கொண்டிருந்தது. மனம் இருப்புக் கொள்ளவில்லை. மதியவேளை உணவு நேரத்துடன் ஒரு அரைநாள் விடுப்புப் பெற்றுக் கொண்டேன். அவசரமாக கடையில் சில பலகாரங்களை வாங்கி எடுத்துக் கொண்டு பேரூந்தைப் பிடித்து ஏறி அமர்ந்துவிட்டேன்.

மனம் தவித்தது. "பிஞ்சுகளுக்கு ஏதும் சுகயீனமோ? தாய்க்கு ஏதும்?... இப்ப குழந்தையளை வேறை தேவையளுக்கு பாவிக்கிற?... சீச்சீ அப்படி யொண்டும் இருக்காது" மனம் அங்கலாய்த்தது.

"படிப்பை ஏன் விட்டனீங்கள்" என்று கேட்டதற்கு "சண்டைக்குப் பிறகு" என்று மொட்டையாகச் சாரங்கன் சொன்ன பதில் மீண்டும் மீண்டும் என் காதுகளைக் குடைந்து, இதயத்தைத் தின்றது. போர் சப்பித்துப்பிய பூக்கள் ஏராளம்.

பேரூந்திலிருந்து இறங்கி அந்த மண் பாதையில் இரண்டு கட்டைகளைத் தாண்டி நடந்து போகின்றேன். ஒழுங்கற்ற அந்தப்பாதையில் இந்தப் பிஞ்சுகள்

நாளாந்தம் எப்படித்தான் இரண்டு தடவைகள் நடக்கிறார்களோ!

ஒருவாறு விசாரித்து அந்தப்பிள்ளைகள் இருக்கும் குடிலை அண்மித்துவிட்டேன். சுற்றிவரப் புதர்கள் மண்டிய அந்தப் பரந்த காணியின் நடுவே தகரங்கள் வேயப்பட்டு, தகரங்களால் தட்டிகள் அமைக்கப்பட்ட நெருப்புப்பெட்டி வீடு அது. வாயிலில் நின்று சாரங்கன் சாகித்யாவின் பெயர்களைக் கூப்பிடுகின்றேன். என்னைக் கண்டதும் அவர்களின் முகத்தில் மகிழ்வின் மின்னலொன்று வெட்டியது.

“மாமா வாங்கோ. வாங்கோ மாமா”

“இண்டைக்கு 'ஒவ்வீசுக்கு' போகேல்லையே”

“ஏன் மாமா இவ்வளவு தூரம்?”

வாழ்வில் அடிப்பட்டவனுடைய நிதானமான வார்த்தைகள்.

“என்னப்பு சாரங்கன் மூண்டு கிழமையாகக் காணவேயில்லை. தங்கச்சியும் படிக்கப்போகேல்லையே என்ன நடந்தது? மனங்கேக்குதில்லை. அதுதான் ஒருக் கால் வந்து பாப்பமெண்டு”

“ஆரப்பு அது? ஆரோடை கதைக்கிறியள்? என்னவாம்?”

நான் பேசும் ஒலிகேட்டு உள்ளே குடிலிலிருந்து குரல் கொடுத்தது சாரங்கனின் தாய் என்பதைப் புரிந்து கொண்டேன். அனுமதி கேட்காமலேயே குனிந்தபடி உள்ளே நுழைய, பிள்ளைகள் இருவரும் என்னைப் பின்தொடர்ந்தனர்.

எதுவுமற்ற குடிலின் ஒரு ஓரத்தில் மூன்று கால் கல்லடுப்பு, ஒரு தாச்சிச்சட்டி கொஞ்சம் பெரிதாய், சாரங்கன் சுமக்கும் 'பிளாஸ்ரிக்' பை, சில பாத்திரங்கள், விறகுத் துண்டுகள் எல்லாவற்றுடனும் அந்தப் பிஞ்சுகளின் தாய் வெறுநிலத்தில் மல்லாந்து உடல் போர்த்திப் படுத்திருந்தாள்.

"அம்மாவுக்கு என்னப்பன் வருத்தமே ?

"மாமா அம்மாவுக்கு இரண்டு கிழமைக்கு மேலை காய்ச்சல்.. ஏலாது. கிட்டை இருக்கிற ஆஸ்பத்திரிக்கு ஆட்டோவிலை கொண்டுபோய்க் காட்டினது. அவை வவுனியா ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகட்டாம். அடுத்த கிழமை 'ஒப்பிரேசன்' செய்யட்டாம்."

"என்னத்திலை?"

போர்வையைக் கீழ்ப்புறம் விலக்கிக் காட்டினான் சாரங்கன்.

"ஐயோ!" வாய்விட்டே என் அதிர்ச்சியைக் காட்டிவிட்டேன்.

"மாமா...ஷெல் விழுந்து இரண்டு காலும் வெட்டினது. இப்ப காலிலை புதிய தசை அளவுக்கு மிஞ்சி வளருது. அது புண்ணாக மாறுது. அம்மாவாலை இப்பவெல்லாம் இருந்த இடத்திலை இருந்து கூட கச்சான் வறுக்க முடியேல்லை. படுத்துத்தான் கிடக்கிறா"

சொல்லி முடிக்கும் போது சாரங்கனின் கண்களிலிருந்து சில துளிகள் உதிர்ந்தன. என் இதயத்தில் அவை அணுவுலைகளாய் வெடித்துப் பரவின.

"தம்பி உங்களைத்தான் இந்த ரெண்டும் மாமா மாமா எண்டு கதைக்கிறதுகளாக்கும். இப்பதான் பார்க்கிறன். தேத்தண்ணி போட்டுக்கூட உங்களுக்குத் தர முடியேல்லை. இப்ப கொஞ்ச நாளாகக் கச்சான் வறுக்கக் கூட முடியேல்லை. தகப்பனைத்தானே பறிகுடுத்துட்டுதுகளெண்டால் இப்ப என்னையும் "

என்மனதில் ஆயிரம் குண்டுகள் வெடித்த அதிர்வு.

வாங்கிவந்த பலகாரத்தை சாகித்யாவிடம் கொடுத்து விட்டு எனது சட்டைப்பையிலிருந்த சிறுதொகைப்பணத்தைச் சாரங்கனின் கையில் வலுக்கட்டாயமாகத் திணித்தேன்.

"மாமா இண்டைக்கு யாழ்ப்பாணம் போறன். அங்கை எனக்குத் தெரிந்த ஒரு 'டொக்ரர்' இருக்கிறார். அவரைச் சந்திச்சு அம்மாவுக்கு எல்லாம் செய்யலாம். கவனம் நான் நாளைக்கு வந்து கூட்டிக்கொண்டு போறன். சரியே கவனம்"

என்று சொல்லித் திருப்பி நடக்கும் போது காலில் ஏதோ தட்டுப்பட்டது. சாகித்யாவின் பாடசாலைப் புத்தகப்பை. அதனை எடுத்து அவளின் தோளில் போட்டுவிட்டு அந்த மண்பாதையில் இறங்கி நடக்கத் தொடங்கினேன்.

இரண்டு பிஞ்சுகளும் என்னைப் பார்த்துக் கையசைத்தபடி நின்றார்கள்.

# பூக்கள்

03

அவனுள் பொங்கிக் கொண்டிருந்த கோபம் இப்போது கண்களின் மடைதிறந்து கண்ணீராய்க் கொட்டியது. அவனது அழுகையை நிறுத்தி விட வழி தெரியாது தடுமாறி நிற்கின்றேன்.

அவனிடத்தில் பொங்கிய கோபத்தினால் அடிவாங்கிய மாணவன் அவனிடம் மன்னிப்புக் கேட்டு, அவனது அழுகையை ஆற்ற முனைந்தும் தோற்றுப் போகின்றான்.

"அதி இந்தா உன்ரை ரோஜாப் பூ. நான் ஆசையிலை பிடுங்கிப் போட்டன். இனி ஒரு நாளும் பிடுங்கமாட்டன். அழாதையடா அழாதை"

அந்த மாணவன் அவன் முன்னிலையில் தான் பறித்த ரோஜாப் பூவை நீட்டிக் கொண்டு நிற்கின்றான்.

இவனுடைய முகத்தில் திடீரென

ஒரு மாற்றம். அவன் நீட்டிய ரோஜாப் பூவை வாஞ்சையோடு வாங்கித் தனது சட்டைப் பையினுள் வைத்துக் கொள்கின்றான்.

என்னுள் ஆயிரம் வினாக்கள்..

அதிரதனுக்கு வகுப்பாசிரியர் நான்தான். அவனை ஆரம்பநிலை வகுப்புகளிலிருந்து அறிந்தவன். நான் அறிந்தவரை இவ்வளவு காலத்திலும் ஒருபோதும் இப்படி அவன் நடந்து கொண்டதில்லை. கடந்த சில காலமாக அவனிடத்தில் உறைந்திருந்த பெரியமனுஷ அமைதி அவனது வயதின் மாற்றத்தினால் வந்துவிட்ட ஒன்று என்று எண்ணியிருந்தேன்.

இப்போது என்னுள் ஒருவித ஆராய்வூக்கம். அவனிடத்தில் கடந்த மூன்று மாதகாலமாகக் கவிந்திருந்த தனிமையின் இரகசியத்தை ஆராய்வது எனது முதன்மைக் கடமையாக உணர்கிறேன்.

ஒவ்வொரு பிள்ளையின் பின்னாலும் ஒரு கதை இருக்கத்தான் செய்கின்றது. வாழ்வின் கனதியைச் சுமக்க முடியாத வயதில் சுமந்தவர்கள் அவர்கள்.

வாழ்வு நந்திக்கடலில் கொட்டப்பட்டபோது, அவன் மூன்றாம் தரத்தில் படித்துக் கொண்டிருந்தான். வேரோடு பிடுங்கப்பட்ட வாழ்வில் உதிர்ந்துவிடாத துளிர்களின் பிரதிநிதி அவன். சிலசமயங்களில் உதிர்ந்து விட்ட துளிர்களின் பிரதிநிதியும் அவன்தான்.

அதிரதனுக்கு இப்போது பத்து வயது. ஏழு வயதில் அவனைப் பாடசாலையில் கண்டபின்னர் இப்போதுதான் பார்க்கிறேன். அப்போது

அவனிடம் இருந்த துருதுருவென்ற கண்கள் எப்போதும் ஏதோ ஒன்றைச் செய்ய நினைக்கும் பரபரப்பு தனது தோழர்களுடனும் ஆசிரியர்களுடனும் கொண்ட சினேகப் பிணிப்பு எல்லாம் இப்போது தொலைந் திருந்தன.

உருக்குலைக்கப்பட்ட உலோகக்குவியல்களின் நடுவே தேடப்படும் வாழ்வு காட்சிப் பொருளாக்கப் பட்ட தருணத்தில்தான் எங்கள் பாடசாலையும் மெல்ல மெல்ல உயிர்ப்புப் பெறத் தொடங்கியது.

மாணவர்கள் மீளப் பாடசாலைக்கு வந்தபோது ஒவ்வொருவரும் ஒவ்வொரு பூச்செடி கொண்டு வந்து நாட்டி வளர்க்க வேண்டும் என்ற கட்டளையைப் பிறப்பித்திருந்தது நான்தான்.

மீளக்குடியேறி வந்த சில நாட்களில் இந்தப் பிரதேசம் மனிதர்களின் முகங்களைத் தேடின. தொலைந்த முகங்கள் ஒன்றும் வியப்பானவையல்ல. இருந்த முகங்கள் தான் இன்னும் வியப்பானவை.

அப்போதுதான் அதிரதனுடைய பெற்றோரைக் கண்டேன்.

“சேர்.. நாங்கள் அதிரதன்ரை அம்மா அப்பா. அவன் பள்ளிக்கூடம் வரமாட்டான் எண்டு முரண்டு பிடிக்கிறான். என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. காரணம் கேட்டாலும் சொல்லுறானில்லை. தனியத் தனிய இருந்து யோசிக்கிறான். முதல் ஒரு ஏழெட்டு நாள் வந்தவன். பிறகு மாட்டான் எண்டு சொல்லுறான். நீங்கள் ஒருக்கால் கவனிப்பியள் எண்டுதான் உங்களிட்டைச் சொல்லுறம். பார்த்துக் கொள்ளுங்கோவன்”

அவர்கள் சொன்ன வார்த்தைகள் இன்னும் என் காதுகளில் கலந்திருந்தன.

நான் அறிந்தவரை இன்றுதான் அதிரதன் அழுததைப் பார்த்திருக்கிறேன். அதுவும் ஒரு கர்ணகடூர கோபத்துடன்.

எப்போதும் எல்லா ஆசிரியர்களாலும் 'பண்பான பிள்ளை' என்று பேரெடுத்த அதிரதனா இப்படி நடந்து கொள்கின்றான்?

விசாரணை செய்யத் தூண்டியது பொதுப்புத்தி. இல்லை என மறுத்தது என் இதயமா? அன்றி மூளையா? புரியவில்லை.

அதிரதனை தனித்து அழைத்து செல்கின்றேன். என்னால் காட்டக் கூடிய அளவுக்கு பரிவு காட்டி அவனுடன் பேசுகின்றேன். இந்தத் தருணத்தை விட்டு விட்டால் அந்தச் சிறுவனின் மனதடியில் பொதிந்துள்ள விடயங்களை கேட்டறிய முடியாது போய் விடும் என்பதை உணர்ந்து பவ்வியமாகப் பேசுகின்றேன்.

"அப்பன், அதி, நீங்கள் கெட்டிக்காரப்பிள்ளை. பள்ளிக்கூடத்திலை எல்லாருக்கும் உங்களை நல்லாப் பிடிக்கும். நல்ல 'மாக்ஸ்' எடுக்கிறனீங்கள். பேச்சு, பாட்டு, கவிதை எல்லாம் நல்லாச் செய்யிறனீங்கள். இந்த சரஸ்வதி பூசையிலும் உங்களை ஒரு பாட்டுப்பாட வைக்க நான் விரும்புறன். நீங்கள் ஒருநாளும் ஒருத்தரோடையும் சண்டை பிடிச்சதை, ஏசினதை நான் காணேல்லை. ஏனப்பன் சிந்துஜனுக்கு அடிச்சனீங்கள் அவன் உங்களுக்கு ஏதும் செய்தவனோ?"

இவ்வளவு வார்த்தைகளின் பின்னும் அவன்

மௌனியாகவே இருந்தான்.

"அதிரதன், அப்பன்... சிந்துஜன் உங்களுக்கு அடிச்சிருந்தால் சொல்லுங்கோ அவனை அதிபரிட்டை அனுப்பி அப்பா அம்மாவுக்குச் சொல்லியனுப்புவம்."

என் வார்த்தைகள் முடிய முன்பே "இல்லை சேர் அவன் அடிக்கேல்லை. அவன் பாவம். நான்தான் அவனுக்கு அடிச்சுப்போட்டன்". கலக்கத்துடன் வந்து விழுந்தன வார்த்தைகள்.

"நீங்கள் ஒருத்தருக்கும் அடிக்கிறதில்லை. எல்லாரோடையும் நட்பா இருப்பியள். பின்னை ஏன் சிந்துஜனுக்கு?.... அவன் உங்கடை பிரண்ட் இல்லையா?".

"சேர் அவன் என்ரை பிரண்ட் தான் ஆனாலும்."

"என்னப்பு, என்ன செய்தவன் சொல்லுங்கோ? அவன் குற்றம் செய்தால் நிச்சயம் நானே அவனை தண்டிக்கிறன். சொல்லுங்கோ?"

"சேர், பாவம் சிந்துஜன். அவனுக்குத் தெரியாது. அது என்ரை கிரியன் எண்டு அவனுக்குத் தெரியாது. பாவம் சேர் அவன் சிந்துஜன். அவனும் என்ரை கிரியன் போலத்தானே."

ஓவென்று கதறி அழத்தொடங்கினான் அதிரதன்.

"அதி, அழாதையுங்கோ அப்பன். சேர் ஆரையும் தண்டிக்க மாட்டன். அழாதையுங்கோ"

அதிரதனின் அழுகை ஓய்ந்துவரும் அந்த நிமிடங்களில் என் மனக் கண்ணில் 'கிரியன்'.

கிரிதரன் அதிரதனின் பாலர் வகுப்பு நண்பன். சுட்டித்தனத்துக்குக் குறைவில்லாதவன். பாலர் விளை யாட்டுகளில் விண்ணன். எப்போதும் அதிரதனுடன் கைகோர்த்தபடி நடப்பான்.

ஒருமுறை பாடசாலை விளையாட்டுப் போட்டியில் கிரிதரன் தடுக்கி விழுந்து காலில் ஒரு உரோஞ்சல் காயம் ஏற்பட்டபோது அதிரதன் துடித்த துடிப்பை நேரிலே கண்டிருந்தேன்.

இப்போது ஓரளவு எனக்கு விவரம் புரியத் தொடங்குகின்றது.

"உங்கடை கிரியனா? ஆரது அப்பன்?"

எதுவும் தெரியாதது போல மனதை இறுக்கிக் கொண்டு கேட்கின்றேன்.

"என்ரை கிரியன் இதுதான். இந்தப் பூ பூத்த மரந்தான். அதைப் பிடுங்கினால் எனக்குப் பிடிக்காது சேர்"

தனது சட்டைப்பையிலிருந்து வாளிப்பான ரோஜாப் பூவை எடுத்து எனக்குக் காண்பிக்கின்றான். கண்கள் கொட்டின.

"அழாதையுங்கோ, அப்பன் அதி ஏன் இந்த ரோஜாவைக் கிரியன் எண்டு சொல்லுறீங்கள்?... இது கிரியன் உங்களுக்குத் தந்த ரோஜாவோ சொல்லுங்கோ?"

"இல்லை சேர், இதுதான் கிரியன். இந்த ரோஜாச் செடிதான் கிரியன். நான் அவனைத் தண்ணி ஊத்தி வளர்க்கிறன். அதை சிந்து பிடுங்கிப்போட்டான். அதுதான் அடிச்சனான்".

தேம்பித் தேம்பி அழுதுகொண்டே சொல்கின் றான். எனக்கு உள்ளம் கலங்குகின்றது. அவனுடன் நானும் சேர்ந்து அழுதுவிடுவேன் போல இருக்கிறது.

"இஞ்சை, அப்பன் அதி, கிரியன் இடம்பெயர்ந்து போய் எங்கையும் வெளிமாவட்டத்திலை இருப்பார். நீங்கள் கவலைப்படக்கூடாது என்னப்பன்....

கிரிதரனுக்கு நடந்தது தெரிந்திருந்தும் அதிர தனைத் தேற்றுவதற்காகச் சொன்னேன்.

"இல்லை சேர், என்ரை கிரியன் செத்துப் போனான். அவன் என்னோடைதான் பள்ளிகூடம் வருவான். எனக்குப் பக்கத்திலைதான் இருப்பான். சாப்பிடேக்கை எனக்குத் தன்ரை சாப்பாட்டிலை தருவான். அவன் என்னை விட்டிட்டு போட்டான்"

அந்த ரோஜாப்பூவை மீண்டும் கையில் எடுத்துப் பார்த்து அழுது கொள்கிறான். பின்னர் சட்டைப்பையில் அதனைப் பத்திரப்படுத்திக் கொள்கின்றான்.

எனக்கு இதயத்துச் சுவர்களில் ஈட்டிகள் பாய்வது போன்ற வலி.

இறுதி நாட்களில் கிரிதரனும் அவனது இரண்டு சகோதரிகளும் பெற்றோருடன் இருந்த பதுங்குகுழி மீது ஒரு குண்டு நேரே வீழ்ந்து வெடித்ததாகக் கேள்விப் பட்டிருந்தேன்.

என்னுள் அதிரதனை இழந்துவிடக்கூடாது என்ற பரபரப்பு மிஞ்சுகின்றது.

"அதி, அப்பன், நாங்கள் கிரியனுக்குத் தண்ணீர் விடுவமா? உங்களுக்கு சிந்துஜனும் உதவி செய்வான்.

மற்றவையும் உதவி செய்வினம் வாறியளா?

"ஓம் சேர்.. ஓம்" அவனது முகத்தில் ஒரு ஒளி பட்டென வெட்டியது.

என்னுள் அவனின் அழுகையை ஊடறுத்து விட்டேன் என்ற மகிழ்ச்சி.

"சிந்துஜன்.. வாங்கோ... மற்றப் பிள்ளைகளையும் கூட்டி வாங்கோ. நாங்கள் அதிரதன்ரை ரோஜாவுக்குத் தண்ணி வார்ப்பம்.. அதிலை வாற பூவை இனி ஒருதரும் பிடுங்கக்கூடாது. சரஸ்வதி பூசையிலை கடவுளுக்கு வைக்கமட்டும் பிடுங்கலாம்.. என்னப்பன் அதி..."

"ஓம் சேர்" அவனிடம் ஒரு வித மகிழ்ச்சி.

நீருற்றுவதற்காக எடுத்து வந்த பூவாளியை சிந்துஜனின் கைகளில் நோக்கம் கருதித் திணிக்கின்றேன்.

அந்த இடத்தை விட்டு மெல்ல விலகி நடந்து செல்கிறேன். எட்ட நின்று பார்க்கிறேன்.

சிந்துஜனும் அதிரதனும் கைகோர்த்தபடி தண்ணீர் எடுத்து வரப்போகின்றார்கள். 'கிரியனைச்' சுற்றி மற்றப் பிள்ளைகள் வட்டமாக நிற்கின்றார்கள்.

என் கண்ணில் மெல்லிய நீர்த்திரை ஒன்று வந்து மறைகிறது.

04

# தலைவிதிப்படி

"சாதனாவைக் காணவில்லை. இண்டைக்கும் கூட அவள் வரவில்லை. எல்லாப் பிள்ளையளும் பொம்மையள் மாதிரி வெளிக்கிட்டு வந்து நிக்குதுகள். அவள் மட்டும்?."

மாதவி ரீச்சருக்கு மனம் ஒருநிலையில் இல்லை. இரண்டாம் வகுப்பின் வகுப்பாசிரியரான அவளுக்குத்தான் இன்று வேலைப்பளு. கால்கோள் விழாவில் இரண்டாம் வகுப்புப் பிள்ளைகள்தான் புதிதாக வந்துள்ள முதலாம் வகுப்புப் பிள்ளைகளை வரவேற்க வேண்டும்.

"நாங்கள் படிச்ச நேரத்திலை இந்த விழாக்கள் ஒண்டுமில்லை. இப்பதான் ஒரு பிள்ளை மையக் கல்வி, பிள்ளைநேயப் பாடசாலை இதெல் லாம்.."

மாதவி ரீச்சரின் வேலைப்பளு அவளை இப்படியெல்லாம் சிந்திக்க வைத்தது.

மாதவி ரீச்சருக்கு முப்பத்திரண்டு வயது மதிக்க லாம். ஆரம்பக் கல்விக்கென விசேடமாகப் பயிற்சி பெற்று கற்பிக்கும் ஒரு பட்டதாரி ஆசிரியை. சிறப்புக் கலையை பட்டதாரியான இவள், ஆசிரிய நியமனம் கிடைத்தபோதே ஆரம்ப வகுப்புக்கு கற்பிக்க வேண்டும் என்று விருப்பத்துடன் வந்தவள்.

“நான் ஒரு பட்டதாரி. படிப்பிச்சால் உயர்தரத் துக்கத்தான் படிப்பிப்பேன்“ என்று வீராப்புப் பேசி உயர்தரத்தை ஆரம்பப் பிரிவாக மாற்றிவிடும் பட்டதாரி களிலிருந்து இவள் வேறுபட்டவள். கொள்கையுள்ள ஒரு இளம் ஆசிரியை.

“பிரதம விருந்தினர் பார்த்தால் முழிக்க வேணும். ஏற்பாடு அப்படி இருக்க வேணும். கல்வித்திணைக் களத்திலை போய் எங்கடை விழாவைப் பற்றிச் சொல்ல வேணும், சரியோ”.

அதிபர் இரண்டு நாட்களுக்கு முன்னரே தனது நோக்கத்தை இவள் மீது திணித்துவிட்டார்.

“சின்னஞ் சிறிசுகளைக் கொண்டு ஒரு விழா நடத்திறதெண்டால் சும்மா விசயமே?... அவருக்கென்ன கடைசியா வந்து நடுக்கதிரை பார்த்து குந்திவிடுவார்.”

பிள்ளைகள் எல்லோரும் வந்துவிட்டனரா?... நிகழ்ச்சிகளை வழங்கும் பிள்ளைகள் யாவரும் உள்ளனரா?... பிள்ளைகள் வரவேற்கும் போது வழங்கவேண்டிய பரிசுப் பொதிகள் சரியாக உள்ளனவா?... எல்லாவற்றையும் மாதவி ரீச்சர்தான் பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. பரபரப்பு வரவர அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

"சாதனா இன்றும் கூட வரமாட்டாளா?... பாவம் அந்தப் பிஞ்சு என்ன செய்யும்? அதுன்ரை மனம் எப்படியிருக்கும்?... பள்ளிக்கூடம் தொடங்கி ஒரு மாதமாச்சு. இன்னும் ஒருநாள் தன்னும் அது வகுப்பிலை சந்தோஷமா இருக்கேல்லை. ஒரு நிகழ்ச்சியிலையும் அந்தப் பிள்ளையை சேர்த்துக் கொள்ளவே முடியேல்லை. நான் என்ன செய்ய முடியும்?.... முதலாம் வகுப்பில்லையே... எனக்கு இரண்டாம் வகுப்புத்தானே தந்திருக்கினம்."

இவ்வளவு வேலைப்பளுவான சூழலிலும் மாதவி ரீச்சரின் மனம் சாதனாவின் நினைவுகளைச் சுமந்தபடி அலைக்கழிந்து கொண்டே இருந்தது.

சாதனாவின் பிஞ்சு மனத்தில் புதைந்து விட்ட கனத்த இருளின் கொடுமை பற்றி மாதவி ரீச்சர் உணர்ந்த அளவிற்கு வகுப்பாசிரியை சாவித்திரி ரீச்சர் அறிந்திருக்கக்கூடமுடியாது.

"தான் ஒரு 'சீனியர் ரீச்சராம்'.. ஒரு குழந்தையின்ரை மனசை விளங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு என்னெண்டுதான் பதினைஞ்சு இருவது வரிசத்தை ஓட்டித் தள்ளிச்சுதுகளோ தெரியாது. சொல்லேக்கை மட்டும் 'சீனியர்' சேர்த்துத்தான்... அதுமட்டும் கொஞ்சம் விட்டுக்கொடுத்திருந்தால் இண்டைக்கு அந்த சாதனா இங்கை எல்லோரையும் போல துள்ளிக்கொண்டு திரிஞ்சிருக்கும்.."

சாவித்திரி ரீச்சர்தான் சாதனாவின் வகுப்பாசிரியை. பதினாறு வருட சேவையை பூர்த்தி செய்திருந்தாள். சாதனாவின் வகுப்பு மாணவர்கள்

அவளிடம் கற்கும் பதினேழாவது அணியினர். தான் ஆரம்பவகுப்பில் கற்பித்த பிள்ளைகள் இப்போது உயர்தர வகுப்பில் படிக்கிறார்கள் என்பதில் சாவித்தி ரிக்கு அளவு கடந்த பெருமை. இன்று அந்தப் பாடசாலை யின் ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களில் கையில் பிரம்பு வைத்திருக்கும் 'தகுதிபெற்ற' ஆசிரியை சாவித்திரிதான்.

"மாதவி, எல்லா ஒழுங்கும் சரியா? நாங்கள் ஆயத்தமாகி விட்டம். முதலாம் வகுப்பின்ரை இரண்டு 'டிவிஷனும்' ஒழுங்காக இருக்கு. இனி நீங்கள் சரியெண்டால் சரி. இன்னும் நேரம் போகுமோ?..."

அதிபரின் காதுகளில் விழுந்துவிட வேண்டும் என்பதற்காக சாவித்திரி ரீச்சர் சத்தமாகவே கேட்டு வைத்தாள். தான் மட்டுமே நேரத்துடன் காரியம் புரிபவள் மற்றவர்கள் அப்படியல்ல என்று அதிபரின் காதுகளில் சொல்லிவைக்கவே அந்த முயற்சி.

முதலாம் வகுப்பின் இரண்டு பிரிவுகளிலும் உள்ள மாணவர்களின் பெயர்ப்பட்டியல் வாசித்து அவர்கள் ஒழுங்குபடுத்தப்படுகின்றார்கள். மாதவியின் காது கூர்மையடைகின்றது. 'சானா' வரிசைப் பெயர்கள் ஒவ்வொன்றாகக் கடந்து போகின்றன. சாதனா?... சாதனா?...

"ச்சே, ஒரு பிள்ளையின்ரை எதிர்காலம். சும்மா விழா எடுத்தால் போதுமா? இந்த வேலையை விட்டுட்டு எங்கையாவது போய் விடவேணும் உப்பிடிப் பட்டதுக ளோடை வேலை செய்தால் பைத்தியம் தான் வரும். பிள்ளை வகுப்பிலை இருந்து படிக்காமல் வெளியிலை போக விரும்புதெண்டால் ஒண்டில் வகுப்புக்குள்ளை

அதுக்கு விருப்பமில்லாதது இருக்கவேணும். அல்லது வகுப்புக்கு வெளியிலை அது அதிகம் விரும்புறது இருக்கவேணும். இதுதானே அடிப்படை உளவியல்?... கதைக்கவிட்டால் 'கவுன்சிலிங்', 'மென்ரல் ஹெல்த்' எண்டு விளாசித் தள்ளுவினம்"

மாதவி ரீச்சரின் மனதுக்குள் பல்லாயிரம் தீ நாக்குகள் சுவாலை விட்டெரிந்தன. விழாவுக்கான ஒழுங்குகள் ஓரளவு நிறைவு பெற்றபோதும் அவளது மனம் நிறைவு பெறவில்லை. சாதனாவின் நினைவுதான் பீறிட்டு மிதந்து வந்து கொண்டிருந்தது.

"எப்ப பார்த்தாலும் இந்தப்பிள்ளை இரண்டாம் வகுப்புக்குள்ளை ஓடிப்போய் நிக்குது. பள்ளிக்கூடம் தொடங்கி இவ்வளவு நாளாச்சு. என்ரை வகுப்பிலை இருக்கிறதில்லை. 'B' டிவிஷனிலை கூட மாத்தி இருத்திப்பார்த்தும் அங்கையும் இருக்குதில்லை. மற்றப் பிள்ளையளெல்லாம் இருக்குதுகள் தானே. இதுக்கு மட்டும் என்ன குழப்பமோ தெரியாது. வீட்டிலை பெரியாக்கள் கவனமெடுக்கிறதில்லைப் போலை மற்றப் பிள்ளையளோடை சேரமாட்டனெண்டு நிக்குது. இதை 'கவுன்சிலிங்' ரீச்சரெட்டைத்தான் விடவேணும் போலை"

சாதனா பற்றித் தான் 'கண்டுபிடித்த' விடயங் களாக சாவித்திரி ரீச்சர் இன்னொரு ஆசிரியைக்குக் கூறிய வார்த்தைகளின் உஷ்ணம் இப்போது இன்னும் அதிகமானது.

சாவித்திரி ரீச்சரின் முதலாம் வகுப்பிலிருந்து வெளியே ஓடிச்செல்லும் ஒரேயொரு பிள்ளை

சாதனாதான். அவளை வகுப்பில் இருத்துவதற்கு சாவித்திரி ரீச்சர் எடுத்த 'தந்திரோபாயங்கள்' பல. வீட்டிலிருந்து தகப்பனாரை வரவழைத்து பிள்ளையைக் கவனியுங்கள் என்று அறிவுரை கூறினாள். பிள்ளை வெளியே ஓடும்போது ஐந்தாம் வகுப்பு மாணவர்களை விட்டு துரத்திப் பிடித்துவைத்தாள். இப்படி இவரின் தந்திரோபாயங்கள் தருணங்களிற்கு ஏற்ப மாறுபடும்.

"எத்தனை வழியளைச் செய்து பார்த்திட்டன். ஒண்டுக்கும் மசியிறாளில்லை பெட்டை. இப்பவே எண்ணங்கள் வந்திட்டுது. என்னையும் அவ்வளவு மதிக்கிறாளில்லை. தடி எடுத்தாலும் பயப்பிடமாட்டன் எண்டு நிக்கிறாள். எப்ப பார்த்தாலும் இரண்டாம் வகுப்புக்குள்ளைதான் ஓடுறாள். அதுக்கைதான் கிடக்கிறாள்"

சாவித்திரி ரீச்சர் ஒருமுறை பிரதி அதிபருக்குக் கூறிக்கொண்டிருந்தது மாதவி ரீச்சரின் காதுகளிலும் விழுந்திருந்தது. அந்த வார்த்தைகளில் தன்மீது குற்றம் சுமத்தப்படுவதும் ஒரு நோக்கமாய் அமைந்திருந்ததை அவள் உணராமலில்லை.

இந்த ஒருமாத காலமாக அந்தக் குழந்தையின் ஏக்கங்களை யாருமே கவனிக்கவில்லை என்ற வெப்பிசாரம் இன்று மாதவி ரீச்சரின் மனதை சுட்டெரித்துக் கொண்டிருந்தது.

மாதவி ரீச்சரின் இரண்டாம் வகுப்பு என்றால் சாதனாவுக்கு மிகவும் பிடிக்கும். மாதவி ரீச்சருடன் உரசிக்கொண்டு நிற்பதில் அந்தக்குழந்தை மனத்துக்கு அலாதிப் பிரியம். மாதவி ரீச்சரின் சேலைத் தொங்க

லைப் பிடித்து அதனால் தன் முகத்தை ஒற்றிக் கொள்வதில் அளவுகடந்த விருப்பம். சாதனா மாதவி ரீச்சரில் தன்னுடைய தாயைக் கண்டாள்.

"ரீச்சர், உங்கடை சீலை மாதிரித்தான் எங்கடை அம்மாவின்ரை சீலையும் நல்ல வடிவு".

"ரீச்சர் உங்கடை உடம்பிலை தொட்டால் அம்மாவைத் தொட்டமாதிரிக் கிடக்குது. உங்கடை வாசமும் அம்மாவின்ரை உடம்பு வாசம் தான்"

சாவித்திரி ரீச்சரின் வகுப்பிலிருந்து ஓடி வந்து மாதவி ரீச்சரின் வகுப்பில் ஆறுதல் கண்ட வேளைகளில் இப்படித்தான் அதிகம் சொல்லிக் கொள்வாள் சாதனா.

திருமணம் முடித்து மூன்று வருடங்கள் தாண்டியும் குழந்தை பெற்றுக்கொள்ளாத மாதவியின் தசை அணுக்களிலெல்லாம் தாய்மை உணர்வு வெடித்துச் சுவறும் வேளைகள் அவை.

ஒரு நாள் சாதனா உரத்து அழும் சத்தம் கேட்டு சாவித்திரி ரீச்சரின் வகுப்பு நோக்கிச் சென்றிருந்த மாதவி ரீச்சர் முதன் முதலில் சாதனாவை தேற்றினாள்.

"பிள்ளை இங்கை அழக்கூடாது. ரீச்சர் அம்மா மாதிரித்தானே. ரீச்சரோடை வாங்கோ படிக்கலாம். சொக்கா வாங்கித் தாறன். படிச்சாத்தானே பிள்ளை டொக்ரராக வரலாம்."

சாதனா தேறிவிடுவதாயில்லை. மாதவி ரீச்சர் வகுப்பிலிருந்து வெளியேறும் போது அவளைப் பின் தொடர்ந்தவள்தான். பின்னர் ஒரு நாட்கூட சாவித்திரி யின் வகுப்பில் இருக்கவில்லை.

“சாதனா, சாவித்திரி ரீச்சரும் அம்மா மாதிரித் தான். அவவின்ரை வகுப்புத்தான் உங்கடை வகுப்பு. நல்ல விளையாட்டு, பாட்டு எல்லாம் சொல்லித்தருவா. போங்கோவன்ரா. ரீச்சர் பிள்ளையை அடிக்கடி வந்து பார்த்திட்டு வருவன் தானே”

இப்படிப் பலதடவை சொல்லிப்பார்த்தும் சாதனாவை முதலாம் வகுப்புக்கு சாவித்திரி ரீச்சரிடம் அனுப்ப முடியவில்லை.

ஆரம்பப் பிரிவு பகுதித்தலைவர் கூட பலமுறை சாதனாவை முதலாம் வகுப்பில் கொண்டுபோய் இருத்துவதற்குப் பிரயத்தனம் செய்தாள். முடியவில்லை.

“என்ரை அம்மா மாதிரி மாதவி ரீச்சர். மாதவி ரீச்சர் படிப்பிச்சால் தான் நான் என்ரை வகுப்புக்கை போவன். அம்மா.. மாதவி ரீச்சர்.. அம்மா..”

சாதனாவின் அந்த அழுகை மாதவியின் உயிரை உருக்கியது. அதிபரிடம் சென்று தன்னை முதலாம் வகுப்புக்கும், சாவித்திரியை தனது இரண்டாம் வகுப்பிற்கும் மாற்றி விடுமாறு கேட்டாள். அதிபர் சாவித்திரியை அழைத்து அந்த முடிவைக் கூறிவைத்தார்.

“இவ பெரிய ரீச்சர் வந்திட்டா. கற்றுக்குட்டியள். நான் ஒரு 'சீனியர்' எனக்குத் தெரியாதே பிள்ளையை வகுப்பிலை இருத்த. எங்கையோ இருந்து வந்த ஒரு பிள்ளைக்காக பதினைஞ்சு வரியம் “சேவிஸ்“ முடிச்ச என்னை வகுப்பு மாத்தப்போறா அவ. உதுக்கெல்லாம் வேறை ஆளைப் பாருங்கோ. விரும்பினால் பிள்ளையை வேறை எங்கையும் கொண்டுபோய் சேத்துப் படிப்பிக்கட்டும். நல்ல சேட்டையல்லோ”

சாவித்திரி சன்னதங்கொண்டு ஆடினாள். மாதவி கூனிக் குறுகிப் போனாள். மௌனியானாள்.

அந்த வேகத்தில் வெளியேறிய சாவித்திரி மாதவியின் வகுப்பில் புகுந்து சாதனாவைக் கொறகொற வென்று இழுத்துச் சென்றாள். மாதவியின் உயிர் வெடித்துச் சிதறுண்டது.

"அம்மா... என்ரை அம்மா...என்ரை அம்மாற்றீச்சர்... மாதவி ரீச்சர்... ஐயோ!..."

அந்த கொடூரம் முடிந்து ஒரு வாரம் கழிந்து விட்டபோதிலும் அதை நினைக்க மாதவியின் கண்ணோரம் கசியத் தொடங்கியது.

அந்த கொடூரத்தின் மறுநாளில் இருந்து சாதனா பாடசாலைக்கு வரவேயில்லை. மாதவியின் இதயத்தில் பதியமான கருவொன்று கலைந்து சிதைவதை உணர்ந்தாள்.

பாடசாலையே விழாக்கோலம் பூண்டுவிட்டது. பிரதம விருந்தினரை வரவேற்க மாணவர்கள் அணி வகுத்துவிட்டனர்.

மாதவியின் நெஞ்சு கனத்துக் கொண்டு வந்தது. அவளால் அங்கு நின்று எதையும் செய்ய முடியவில்லை. 'சீனியர்' ரீச்சர் சாவித்திரி பிரதம விருந்தினரை மாலை போட்டு வரவேற்பது அவளின் நீர் திரையிட்ட கண்களில் மங்கலாய்த் தெரிகிறது.

"ரீச்சர், எங்கடை அம்மா மாதிரித்தான் நீங்கள். அதுதான் உங்களிட்டை ஓடி வாறனான். எங்கடை அம்மம்மா வீட்டை 'றோஸ்' நிக்குது. நாளைக்கு

கொண்டு வந்து உங்களுக்கு குத்திவிடுறன். அம்மாவும் “றோஸ்” குத்திறவ. எங்கடை அம்மா அங்கை “ஷெல்“ விழுந்து காயப்பட்டு செத்துப் போனா. தெரியுமே உங்களுக்கு?.... எனக்கு அப்பாதான் குளிக்க, சாப்பாடு தீத்த, வெளிக்கிடுத்த... எல்லாம்”

அன்று கேட்ட சாதனாவின் மழலைக் குரல் இப்போதும் காதில் ஒலிக்கிறது. மாதவிக்கு கண்கள் திரையிட்டுக் கொண்டு வருகிறது. ஏதோ ஒரு அந்தகார இருளில் வீழ்ந்து செல்வதாக ஓர் உணர்வு. உடல் சோர்ந்து 'தொப்' என்று வீழ்ந்தாள் மாதவி.

05

# நீண்ட தூரம்

இன்றைக்கு மட்டுந்தான் இந்தப் பரபரப்பு என்று நினைத்து விடாதீர்கள். எங்கள் வீட்டில் இது தொடங்கி ஒரு வாரமாகின்றது. ஒரு கலியாண வீட்டின் முன்னுள்ள பரப ரப்புப் போலத்தான். என்னுடைய மகள் தான் அப்படியென்றால் மனைவி ஒன்றும் குறைந்தவளில்லை. ஏதோ தான்தான் மேடையேறி நாடகம் நடிக்கப் போவதுபோல் மகளைவிட அதிக மாகவே பரபரத்துக் கொள்கி றாள்.

இரண்டொரு வாரமாக காலையில் பாடசாலை நேரத்துக்கு முன்னரும் பிற்பகல் வேளைகளிலும் விடுமுறை நாட்களிலும் கூட மகளை பாடசாலைக்கு ஏற்றி இறக்கிக் கொண்டுதான் இருக்கிறாள் என் மனைவி

இரண்டொரு நாட்களுக்கு முன்னர் மாலை நேரம் நாடகப் பயிற்சி முடியும் வேளை மகளை ஏற்றிவர நான்

புறப்பட்ட போது என் மனைவியும் என்னுடன் தொற்றிக் கொண்டாள்.

"இஞ்சை நில்லுங்கோப்பா நானும் வாறன் ரீச்சரோடை பிள்ளையின்ரை உடுப்புகள், 'மேக்கப்' இதுகளை கதைச்சுக் கொண்டு வரவேணும் நில்லுங்கோ வாறான்"

புறப்படும்போது ஓரளவுக்கு திரும்பும் நேரம் எப்படியும் ஏழு ஏழரை ஆகிவிடும் என்பதை மட்டிட்டுக் கொண்டேன்.

அன்றைய மாலைப் பொழுது எனக்கு கொதியைத் தந்தபடி கழிந்து கொண்டிருந்தது.

என்னுடைய மனைவி 'ஓரளவு பறவாயில்லை' என்பது அப்போதுதான் புரிந்தது.

"என்ன மாதிரி நாடக உடுப்பெல்லாம் தைச்சுப் போட்டினமாமே?"...

"அங்கை போய் தங்கிறது என்ன மாதிரியாம்?"

"பொடியளுக்கு நுளம்பு கிளம்பு கடிச்சு டெங்கு வந்திடும். போர்வையளெல்லாம் வடிவாக் குடுத்து விடவேணும்"

"சாப்பாடுகள் என்னமாதிரி ? ரீச்சர்மார் வாங்கிக் குடுப்பினம் தானே... கண்ட இடமெல்லாம் தின்ன விடவேண்டாம் எண்டு ரீச்சருக்குச் சொல்ல வேணும்"

"வாற வரிசம் ஸ்கொலசிப்பெல்லே இப்ப நாடகம் கூத்தெண்டு திரிஞ்சால் படிப்பு என்னத்துக் காகும்?"...

"பெற்றார் போகலாமாமே?... என்ரை பிள்ளை

என்னை விட்டிட்டு ஒருடமும் படுக்க மாட்டாள்"

"ரீச்சருக்குச் சொல்லவேணும் 'மினரல் வோட்டர்' போத்தில்லை வாங்கிக் குடுக்கச் சொல்லி. வருத்தங்கள் வந்தெல்லே விடும்"

என் மனைவி உட்பட பிள்ளைகளைக் கூட்டிச் செல்லவந்து நின்ற தாய்மார் தங்களுக்குள் பேசிக் கொண்டவை இவை மட்டுமல்ல.

அன்றுடன் என் மகளின் விடயமாக இந்தப் பாடசாலைப் பக்கம் வருவதேயில்லை என்றுதான் அவசரமாக முடிவெடுத்திருந்தேன். ஆனால் இன்றைக்கு என்னால் வராமல் நிற்க முடியவில்லை. முதன்முதல் என் மகள் நானோ என் மனைவியோ இல்லாமல் தூரப் பயணம் புறப்படுகின்றாள். தாய் ஸ்தானத்தை புரிந்து கொண்ட ஆசிரியைகள் தான் அழைத்துச் செல்கிறார்கள் என்பது அறிவிற்கு தெரிந்தபோதும், உணர்வுக்கு சமாதானம் சொல்ல முடியவில்லை.

எட்டு வயதைக் கடந்துவிட்ட போதிலும் இன்றும் அவள் பிறந்த அன்று இருந்த அப்பாவின் உணர்வுடன் தான் மனம் துடித்துக் கொள்கின்றது.

காலையில் பல் விளக்கி விடுவது தொடக்கம் இரவு படுக்கைக்குச் செல்ல முன்னர் சிறுநீர் கழிக்க விடுவதுவரை எல்லாவற்றிலும் இணைந்து நிற்கும் போதுதான் மனம் திருப்தி பெறுகின்றது.

நாளை மறுதினம் திரும்பி வந்து விடுவாள் என்று தெரிந்தும் கூட இடையில் வரப்போகும் ஒரு நாள் ஒரு நீண்ட காலமாய் விரிவதுபோல ஒர் உணர்வு மனதை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டது.

நாங்கள் சென்று பாடசாலை வாயிலில் நுழையும் போதே பயணத்துக்கான 'மினிபஸ்' வண்டி தரித்துநின்றது. வண்டியை கண்டதும் என் மகளின் குதூகலத்தை என்னவென்று சொல்வது... அவள் இறங்கி ஓடிச்சென்று தன் நண்பிகளோடு ஐக்கியமாகி நின்றாள்.

பாடசாலை முன்றலில் புறப்படவிருக்கும் மாணவர்களிலும் பெற்றோரே அதிகமாக நின்றனர். எங்களைப் போலவே ஒவ்வொரு பிள்ளைகளின் பெற்றாரும் தாயும் தந்தையுமாக வந்திருந்தனர்.

““இஞ்சரப்பா... ஒருக்கால் பிள்ளையின்ரை 'பாக்'கை கவனமாப் பாருங்கோ. எல்லாம் கிடக்குதோ எண்டு... பெட்சீட், இரவுக்குப் போட்டுப் படுக்கிற உடுப்பு, தண்ணிப் போத்தில், பிஸ்கட் பெட்டி”...

என் மனைவிதான். இத்துடன் மூன்றாவது தடவை மகளின் பயணத்துக்கான பையினை சரிபார்க் கின்றேன்.

“பிள்ளை... இந்தா பார் அம்மா அப்பா இல்லாமல் தனியப் போறாய்... கவனம் என்ன?... கண்ணாடியுக்குள்ளாலை எட்டிப் பார்க்கக் கூடாது என்ன?... ரீச்சரோடையே நிக்கவேணும். 'பாக்' குக் குள்ளை கரைப் பொக்கட்டுக்கை இருநூறு ரூபா காசு கிடக்கு. வைச்சிரு. திரும்பி வரேக்கை ரீச்சரெட்டை குடுத்து ஏதும் வாங்கிச் சாப்பிடன்.. நுளம்பு கடிக்காமல் வடிவா போர்த்துப் படுக்க வேணும். டெங்கு வந்திடும். பாசலுக்கை இடியப்பம் முட்டைப் பொரியல் கிடக்கு இரவுக்குச் சாப்பிட்டிட்டு படுக்கவேணும். படுக்கப் போக முன்னம் “பாத்ரூம்” போவிட்டுத்தான் படுக்க

வேணும். என்னடா"...

நான் பயணப்பையை சரிபார்ப்பதற்கு இடையில் ஒரு குட்டிப் பிரசங்கமே நடத்தி விட்டாள் என் மனைவி. அவ்வளவும் நானும் சொல்ல நினைத்து, என் மனதுள் அமுக்கிக் கொண்டிருந்த அறிவுரைகள் என்பதால் எனக்கும் ஓர் ஆறுதல். என் மகள் தலையை அசைத்துக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

ஆசிரியை பிள்ளைகளின் பெயர்களை கூவி, தான் வைத்திருந்த பட்டியலைச் சரிபார்த்து ஒவ்வொருவராக 'மினிபஸ்ஸினுள்' ஏற்றிக் கொண்டிருந்தார். பிள்ளைகளின் மனதில் மகிழ்ச்சி வெள்ளம். துள்ளி ஏறி தமது குதூகலத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர்.

என்னுடைய மகளின் பெயர் கூப்பிடப்படுகின்றது. ஆட்டுக் குட்டியைப் போல துள்ளிப் பாய்ந்து வாகனத்துள் ஏறிவிட்டாள்.

எனக்கு உள்ளமெல்லாம் உளைவு எடுத்தது. சின்னப் பிஞ்சு ஒரு நீண்ட தூரப் பயணத்தில் அப்பா அம்மாவின் எண்ணம் வந்து விட்டால்...

இப்போது பெற்றார் வாகனத்தின் கண்ணாடிகளின் வழி தங்கள் பிள்ளைகளுடன் பேசிக் கொள்கிறார்கள்.

பிள்ளைகளுக்கு "ஆனையில் ஏறின புழுகம்!' பெற்றாரின் முகங்களில் கனதி

"பிள்ளை... கவனம் என்ன..."

"குட்டி... விசுகோத்தை கையிலை

வைச்சிருங்கோ சாப்பிட்டுக் கொண்டு போங்கோ...”

“அம்மா... வான் ஓடேக்கை எழும்பி நிற்க கூடாது சரியே... விழுந்து போடுவியள்”

“ராசாத்தி... 'சொப்பிங் பாக்' தேசிக்காயை கையிலை எடுங்கோ.... சத்தி வந்தாலும்...”

கண்ணாடிகளின்வழி அறிவுரைகள் வாகனத்துள் புகுந்து சுமை ஏற்றமுன்னர் அது குதூகலங்களைத்தாங்கி புறப்படத் தயாரானது.

வாகனம் பாடசாலை முன்வாயிலை நோக்கி மெதுவாக நகர்ந்து செல்லச் செல்ல எனக்கும் பிள்ளைக்கு மான உன்னத உறவை யாரோ வெளியே நின்று உறிஞ்சி இழுத்து எடுப்பது போல....

கைகளை அசைத்து விடைகொடுத்து அனுப்பு கின்றோம் பிள்ளைகள் கண்ணாடி வழியே குதூகலமாய் கையசைக்கின்றனர்.

நகரும் வாகனத்தின் ஒவ்வொரு கண்ணாடிகளின் உள்ளும் முகிலின் வழி கசியும் குதூகல நிலாக்களாய் தெரியும் பிள்ளைகளின் முகங்கள்.

அப்போது தான் கவனித்தேன் யாரையும் பார்த்து கையசைக்காது முகத்தில் ஏக்கம் போர்த்தபடி அந்தப்பிள்ளை.... ஐயோ! இதுவரை கண்டு கொள்ளா மல் இருந்து விட்டேனே... கண்ணாடியில் தன் முகத்தைச் சாத்திக்கொண்டு குதூகலிக்கும் பிள்ளை களுக்கு கையசைக்கும் பெற்றாரை ஏக்கத்துடன் பார்த்த படி அவளுக்கு கையசைப்பது யார்?... என்மீது வானமே இடிந்து விழுவதாய் ஒரு வித உணர்வு.

“அப்பா.... இவதான் சர்மி இவவின்ரை அப்பா... அம்மா... ஒரு தம்பி... எல்லாரும் சண்டை நடந்த இடத்திலை செத்துப் போட்டினமாம்... எங்கடை வகுப்புத்தான்... பாவம் என்னப்பா...”

அன்றொருநாள் அந்தப் பிஞ்சினைக் காட்டி என் பிஞ்சு கூறிய வார்த்தைகள் மனக்கிடங்கில் மிதப்பெடுத்தன.

ஊர்ந்து சென்ற வாகனம் பாடசாலை வாயிலைக் கடந்து வேகம் எடுத்தது. இரும்பாய் இறுகிய மனம் அமைதி தேடி அங்கலாய்த்தது.

# இரகசியமாய்க் கொல்லும் இருள்

06

அறையின் மூலை முடுக்குகளி லெல்லாம் இருள் அப்பிக் கிடக்கிறது. இரவை நிறைத்திருந்த இருள் திண்மத் திணிவுகளாய் மனதில் மாத்திரமன்றி விலா எலும்புச் சுவர்களையும் சுமையேற்றி அழுத்திக் கொண்டி ருக்கிறது. மூக்கின் வழி இருள் குழம்பு இறங்கி நாசித் துளைகளை நிறைத்துக் கொண்டிருந்தது. இருளின் சுமை இதய அறைகளை உதைத்துக் கொண்டி ருந்தது. தூக்கத்தைத் தொலைத்திருந்த விழிகளின் ஓரம் உடைப்பெடுத்தி ருந்தது.

எத்தனை இரவுகள் வலி யோடும் சுமைகளின் அழுத்தத்துட னும் வெறுமையாய் மடிந்து போயின. இது போன்ற இரவுகள் இதற்கு முன்னரும் மூளை நரம்பு அணுக்களை குடைந்த தருணங்களும் இருந்தன. அவளருகில் இருந்த காலத்து இரவு

களுக்குள் கனிந்து கவிந்திருந்த அர்த்தங்கள் யாவும் இன்றைய இரவுகளில் செத்து ஒழிகின்றன. அன்று இருளுக்கு கண்கள் ஒளிதந்தன. இன்றோ கண்களுக்குள் இருள் கவிந்து நிறைந்து விட்டது.

இருளில் மிதக்கும் பஞ்சுப் பொதிகளாய் அவனது இரண்டு பிஞ்சுகளும் அருகில் உறங்கிக் கிடந்தன. ஐந்து வயது நிறைந்த மூத்தவள் வலது புறமும் இரண்டு வயதே நிறைந்த சின்னவன் இடது புறமுமாக. அந்த இருளின் அழுத்தத்தில் அவை இரண்டும் தான் அவனுக்கு சிறிய ஒளிப் பொட்டுக்களாக...

இரவின் அந்தகாரத்தைக் கிழித்துக்கொண்டு பாளம் பாளமாக தணல் கட்டிகள் வந்து வீழ்ந்த அன்றைய இரவுகள் அவனது உள்ளத்தை உலுப்பி எடுத்துக்கொண்டிருந்தன.

அறையின் சுவர்கள் நான்கும் அவனுக்கு மேல் இடிந்து வீழ்ந்து கற்குவியல்களாய் மூடிப்போயி ருப்பதாக ஒரு வித உணர்வு. அந்த கற்குவியல்களுக்குள் தனது பிஞ்சுகள் மாண்டுவிடக் கூடாது என்ற ஏக்கம் நிறைந்த கரிசனையுடன் அவர்களைக் கட்டியணைத்துக் கொண்டான்.

கரும் பூதமான இருள் தன் பிள்ளைகளை மென்று தின்றுவிட கதவின் இடுக்கின் வழியே அறையினுள் நுழைய முற்படுவதாக உணர்ந்தான். பழைய சாக்கு ஒன்றை எடுத்து கதவுக்கும் நிலத்துக்கும் இடையிலான மெல்லிய இடைவெளியை மறைத்துக்கொண்டான்.

“அப்பா... மறக்காமல் படுக்கேக்கை கதவு நீக்கலைச் சாக்காலை மறைச்சு விடுங்கோ... யன்னலைப்

பூட்டி விடுங்கோ.. குளிர்காத்து உள்ளுக்கை வரும் நித்திரையாப் போகாதையுங்கோ... கவனம்..."

சில சமயங்களில் இரவு நீண்ட நேரம் விழித் திருந்து ஏதாவது படிக்கும் போது அவள் அவனுக்கு தவறாமல் கூறி வைத்துக் கொண்டு பிள்ளைகளுடன் உறங்கிப் போவாள்.

உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. கண்கள் இருளைத் துளைத்துக் கொண்டு அறையில் மூலை முடுக்குகளையெல்லாம் 'ஸ்கான்' செய்து கொண்டிருந்தது. இருளின் சில திவலைகள் சேர்ந்து திரண்டு ஒரு தேளாகமாறி மூலை ஓரம் ஊர்ந்து செல்வதாக ஒரு வித பிரமை. வளர்ந்து செல்லும் அந்த இருட்தேள் வளர்ந்து வளர்ந்து விஸ்வரூபம் எடுத்து தன் பிஞ்சுகளிடம் வருகிறதா என்ற ஏக்கம்.

"நுளம்பு வலையை நாலு பக்கமும் பாயுக்கு கீழை மடிச்சு விடுங்கோப்பா... அப்பிடியெண்டால் தான் பூரான்... மட்டைத்தேள் கூட உள்ளுக்கை நுழையாது... பொடியளுக்கு நித்திரையிலை கடிச்சுக் கிடிச்சுப் போடும். தலைமாட்டிலை அந்த பொல்லை வைச்சி ருங்கோ ஏதுமெண்டால் உடனை எடுத்து அடிக்கலாம்."

இரவு அதிக நேரம் தன் அலுவலக வேலை ஆயத்தங்களை முடித்துக் கொண்டு பாயில் அவளருகில் படுக்கும் போது அரைகுறைத் தூக்கத்திலும் அவள் நிதானமாகச் சொல்லும் வார்த்தைகள்.

தலைமாட்டில் இருந்த பொல்லினை எடுத்துக் கொண்டு மெதுவாக அறையின் மூலைகள் நான்கையும் நோட்டமிட்டுக் கொண்டான். இருள் பாம்பாக

நெழிந்து அறையின் மூலை ஒன்றில் கிடந்த பெட்டியினுள் ஒழிந்து கொள்கின்றது.

"அப்பா... பெட்டியள், பழைய சாமான்களை எடுத்து வெளியிலை போட வேணும். சின்னனுகள் விளையாடுற இடம். பாம்பைக் கூட கையாலை பிடிச்சு விளையாடுற பருவம்... உதுகளைத் திறந்து பார்த்து தேவையில்லாததை கழிச்சு விடுவம் என்ன?..."

பொல்லினை நீட்டி அந்தப் பெட்டியின் மூடிகளை மெதுவாக அரவமின்றித் திறந்தான். பெட்டியில் இருந்து குதித்தோடியது உண்மையில் இருள் பாம்பா? அல்லது எலிதானா?

"இங்கையப்பா... சின்னவன்ரை பால் போச்சி கவனம். மேசையிலை வைச்சு அந்தக் கூடையாலை மூடி விடுங்கோ. எலி வாய் வைச்சுப் போடும். பொடிக்கு வருத்தம் வந்திடும்... விசுக்கோத்துப் பெட்டி கூட கவனம்..."

மேசையில் மூடிவைத்திருந்த பிஞ்சுகளுக்கு பயன்படுத்தும் மருந்துகள், பால்மா, பிஸ்கட் எல்லாவற்றையும் கூடையைத் திறந்து சரி பார்த்துக் கொண்டான்.

உறக்கமின்றி தவிக்க வைத்த இருள் நீண்டு சென்று கொண்டிருந்தது. பிஞ்சுகள் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். அவர்களின் போர்வையை சீர் செய்து விட்டுக்கொண்டு அருகில் படுத்துக் கொண்டான்.

கண்கள் இரவின் கருமையினைத்தான் ஊடறுத்துக் கொண்டிருந்தன. இதே போன்ற ஓரிரவில்

மார்பை வருடியவாறு அவள் காதோரம் பேசிய வார்த்தைகள் இருளில் கரைந்து வருவதாக உணர்ந்தான்.

"எங்கடை ரண்டு பிள்ளைகளையும் வளர்த்து படிப்பிச்சு... நல்ல உத்தியோகங்களிலை இருத்த வேணும். காதலிச்சு கட்டினதாலை எங்களை கைகளுவிவிட்ட உங்கடை ஆக்களுக்கும் எங்கடை ஆக்களுக்கும் வாழ்ந்து காட்ட வேணும்... இனி எங்களுக்கு பிள்ளையள் வேண்டாம் என்ன?... சரியே?... ஒருவேளை நான் இல்லாட்டிலும் இந்த வெறி உங்களெட்டை இருக்க வேணும்..."

கண்கள் மூட மறுக்கின்றன. இறுக மூடி தூங்கிவிடலாமென்றால்... இருள் இன்னும் அவளின் நினைவுகளின் திணிவுகளாய்...

அதிகாலை மூன்று மணியைத் தாண்டியும் அறையை அப்பிக்கிடந்தது இருள். கிழக்குப் புற அறைச் சுவரில் சிரித்தபடி இருக்கும் அவளின் படம்கூட கரும்புகையாக... அவளின் கைகள் அசைகின்றதா... என்ன சொல்கிறாள்...

"ஐயோ!... நான் என்ன செய்யிறது. அவளை அப்படியே விட்டிட்டனே... ஒரு பிரியன் எண்டு... என்ரை பிள்ளையள் தவிச்சுப் போக... நான் செய்தது சரியா... வேறை என்னத்தை செய்ய... எல்லாம் போச்சுது... அவள் திரும்பி வரமாட்டாளா?"

இருளைத்தான் கேட்கிறான். இப்படி ஒரு இருள் நிறைந்த நாளில் தான் தீப்பாளங்கள் இரவைக் கிழித்து வந்து அவளின் மார்பைத் துளைத்தன. எங்கிருந்து வந்த தீப்பாளங்கள் என்று யாரும் சொல்லிவிட முடியாது.

தீப்பாளங்கள் துரத்த பயந்து ஓடிக் கொண்டே இருந்தான்.

பிள்ளைகள் இருவரையும் தோளில் சுமந்த வண்ணம். மனைவி பின்னே... அன்றும் இருளின் கருமை புதர்களில் பதுங்கி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

அவனுக்கும் அவளுக்குமான தூர இடைவெளியை தீப்பாளங்கள் சர்வ சாதாரணமாய் நிறைத்திருந்தன. மார்பைத் துளைத்த தீப்பாளத்துக்கு இப்படி ஒரு இருள்தான் துணை போனது.

இறுதிக் கணங்களில் நீண்ட தூரத்துக்கு அப்பால் புகைமூட்டமாக அவள் கையசைத்துப் பிள்ளைகளைக் காக்குமாறு சொல்லியிருக்க வேண்டும். அவள் முகக் குறிப்பைக்கூட விளங்கிக் கொள்ள முடியாததை எண்ணும் போது...

அவளை தன்னிடமிருந்து பறித்தது தீப்பாளங்களா?... அல்லது இரகசியமாய் ஒழிந்திருந்த இருளா?... அவனிடம் முடிவில்லை.

இன்றும் கூட இருளில் இவன் விழித்துக் கொண்டிருந்தான். இருளைச் சந்தேகித்த படி தன் பிள்ளைகளை அணைத்துக் கொண்டான்.

ீவநதி 4 ஆடி 2011

# துகிலுரிப்பு

07

பள்ளிக் கூடத்துக்குக் கிட்ட போகப் போக எனக்குச் சரியான சந்தோசமாக் கிடந்தது. தூரத்திலேயே 'ஸ்பீக்கர்' பா டுற சத்தம் கேட்டுது. உடம்பெல் லாம் பாரம் குறைஞ்சு பறக்கிறது போலை கிடந்தது. கெதியாப் போக வேணும்.

அப்பாவின்ரை சைக்கிள் பழைய சைக்கிள். ஓட்டைச் சைக்கிள். 'வீச்சா ஓடுங்கோ' எண்டு சொல்லச் சொல்ல ஓடுறாரில்லை. அவசரம் தெரியாது அப்பாவுக்கு. சோம்பல். எப்ப பார்த் தாலும் 'சிலோக் கோச்சி' மாதிரித் தான். அப்பாவின்ரை சைக்கிள் ஊந்து ஊந்து தான் போகும். நத்தை மாதிரி.

தன்ரை சைக்கிளின்ரை திறத் திலை சாட்டு வேறை சொல்லுவார்.

“பிள்ளை...... அவதிப்படா தையடா.... இன்னும் அரை மணித்தி யாலத்துக்கு மேல கிடக்கு. விளை யாட்டு துவங்க”

திரும்பத் திரும்ப இதைத்தான் எத்தினை தரம் சொல்லிப் போட்டார். அவருக்கு ஒண்டுந் தெரியாது.

"ரீச்சர் எங்களை அரைமணித்தியாலத்துக்கு முன்னமே வந்திடவேணும் எண்டு சொன்னவ. அப்பதானாம் வெளிக்கிடுத்தலாம். நேரத்துக்கு வராவிட்டால் வேறை ஆளைத் தானாம் விடுவினம்"

எண்டு ரீச்சர் சொன்னதைச் சொன்னாலும் அப்பா 'வீச்சா' ஓடுறாரில்லை.

இவ்வளவுக்கு தனுசிகாவின்ரை அப்பா அவளைக் கூட்டிவந்து விட்டிருப்பார். லாவண்ணியாவும் வந்திருப்பாள். அவையின்ரை அப்பாமார் 'மோட்டார் சைக்கிள்' வைச்சிருக்கினம். பின்னை நேரத்துக்கு வருவினம்.

தனுஷி எப்பிடி வருவாள்?.......

அவள் புதுச்சப்பாத்து வாங்கியிருப்பாள். என்ரை சப்பாத்தும் கிட்டடியிலை தான் வாங்கினது. புதுசுமாதிரித் தான்.

சட்டையிலை 'றோஸ்' குத்தி வந்திருப்பாள். அவளின்ரை வீட்டிலை 'றோஸ்' செடியள் பத்தையா நிக்குது. நானும் குத்திக் கொண்டுதான் போறன். அப்பா ஆற்ரையோ வீட்டிலை பத்துரூபா குடுத்து வாங்கின வராம்.

லாவண்ணியும் அப்பிடித்தான் நல்ல வடிவா வெளிக்கிட்டு வருவாள்.

எல்லாரும் வந்து வெளிக்கிடத் தொடங்கியி ருக்குங்கள் போலை.

போன வருஷம் நான் விளையாட்டிலை சேரவில்லை. அப்பா 'டொனேசன்' கட்டப் பிந்திப் போச்சுது. முதலாந் தவணை முடியிற நேரந்தான் நான் பள்ளிக்கூடம் போனனான். விளையாட்டுப் போட்டி எல்லாம் முடிஞ்சுபோச்சு. எனக்குச் சரியான கவலை. என்ரை வகுப்பிலை மற்றப் பிள்ளையளெல்லாம் விளையாடினவையளாம். நான்தான் இல்லை. இப்ப நினைச்சாலும் அழுகை அழுகையா வருகுது.

இந்த முறை நான்தானாம் நல்லாகச் செய்யிறன் எண்டு எங்கடை ரீச்சர் சொன்னவ. மற்றவைக்கு முன்னாலை சொல்லையுக்கை எனக்கு கொஞ்சம் 'கொலர் அப்' தான்..

எங்கடை நிகழ்ச்சிதானாம் முதலிலை எங்கடை ரீச்சர் சொன்னவா.

“ஏன் பிள்ளை அவதிப்படுகிறாய்?... உன்ரை நிகழ்ச்சி - அது எல்லா இடமும் போலை இடை வேளைக்குத் தானே நடக்கும்”

அப்பா இப்பிடியே ஏதோ சொல்லிக் கொண் டுதான் வாறார் இவர் தான் எங்கடை பள்ளிக்கூடப் 'பிறிஞ்சிப்பல்' மாதிரி.

அப்பா இப்பிடித்தான். எல்லாத்துக்கும் விளக்கம் சொல்லிக் கொண்டேதான் இருப்பார். அம்மா எண்டா எனக்கு நல்லாப் பிடிக்கும். எங்கடை நிகழ்ச்சிக்கு 'யூனிபோம்' தைக்க பள்ளிக் கூடத்திலை ஆயிரம் ரூபா கேட்டவை. நான் அம்மாவெட்டை கேட்டன். அம்மா, தான் உண்டியல் போட்டு

சேத்துவைச்ச ஐம்பது ரூபா, நூறு ரூபா தாள்காசுகளை எண்ணிக் கொண்டு பள்ளிக்கூடம் போனவா. ரீச்சரெட்டைத் தானே குடுக்கிறனெண்டு. நான் தான் வகுப்பிலையே முதல் 'யூனிபோம்' காசு குடுத்திருப்பன் போலை. லாவண்ணியின்ரை அப்பா "பாங் மனேச்சர்" அவள் கூட எனக்குப் பிறகு தான் குடுத்தவளாக்கும்.

அப்பாவின்ரை 'சிலோக் கோச்சி' ஒரு மாதிரி பள்ளிக் கூட வாசலிலை வந்து நிண்டுது.

என்ன வடிவாச் சோடிச்சுக் கிடக்குது. எங்கடை நிகழ்ச்சிக்குத் தைச்ச 'யூனிபோம்' நிறத்திலை 'டிசைனாக' வாசலைச் சோடிச்சிருக்கினம். எங்கடை பள்ளிக்கூட 'ரை'யின்ரை நிறத்திலை தான். வாசலிலை இருந்து விளையாட்டு நடக்கிற வெட்டை வரைக்கும் மாலையள் கட்டிச் சோடிச்சுக் கிடக்கு.

எங்கடை பள்ளிக்கூட வாசலிலை ரண்டு பக்கமும் நிக்கிற உச்சாரத்துக்கு வளர்ந்திருக்கிற பெரிய மரங்களுக்குக் கீழை அப்பா சைக்கிள் விட்டிட்டு வரப் போறார்.

அப்பாவைப் பார்த்துக் காத்துக் கொண்டு நிக்க மனம் வரயில்லை. மனம் என்னை ஓடச் சொல்லிச் சொல்லுது. 'ஐஸ்கிறீம் வானும்' நிக்குது. பிறகும் வாங்கலாந்தானே. நான் துள்ளிக் குதிச்சு ஓடினன். ஒரு ஓட்டத்திலை 'ஹவுஸ்' கொட்டிலுக்கே ஓடிவிட்டன்.

ரீச்சர் என்னைக் கண்டிட்டு சிரிச்சா. "கெட்டிக் காரி நேரத்துக்கு வந்திட்டா. நில்லங்கோ கொஞ்சநேரம் போனாப் பிறகு வெளிக்கிடுவம். இன்ரவலுக்குத் தானே

நிகழ்ச்சி." அப்பா சொன்னது சரிதான். எங்கடை நிகழ்ச்சி 'இன்ரோவலுக்கு' தானாம். இப்பதான் ரீச்சர் உண்மையைச் சொல்லுறா.

ச்சே..... எவ்வளவு வடிவான 'யூனிபோம்'. எப்பதான் ரீச்சர் போட்டு வெளிக்கிடுத்தி விடுவாவோ. அந்தரமாக் கிடக்கு.

நான் 'யூனிபோமை' போட்டுக் கொண்டு 'வெட்டையிலை' ஆடியாடிப் போக தூரத்திலை நிக்கிற அப்பாவுக்கு கண்ணுக்குத் தெரியுமோ தெரியாது. ஆரெண்டு யோசிப்பார். குறைக்கு முகமெல்லாம் 'றோஸ் பவுடரும்' பூசி விடுவினம். அப்பா என்னை மட்டுக்கட்ட மாட்டார் எண்டு தான் நினைக்கிறன்.

'வெட்டையிலை' பெரிய அக்காமாரின்ரை ஓட்டங்கள் நடக்குது. எல்லாரும் கத்துகினம் ஓடுறவைய ளோடை சேர்ந்து தாங்களும் ஓடப்பாக்கினம். 'ஹவுஸ்'களின்ரை பேரையும், நிறங்களையும் சொல்லிக் கத்துகினம்.

எனக்கு அதைப் பார்க்க விருப்பமில்லை. நெஞ்செல்லாம் படபடத்துத் துடிக்குது.

ரீச்சரும் முன்னுக்குப் போய் நிண்டு துள்ளித் துள்ளிக் கத்துறா. எங்களை வெளிக்கிடுத்தி விடாமல்.

தரணி, லாவண்ணி, ஹம்சா, தனுஷி எண்டு எல்லாரும் ஆயத்தமாகத் தான் நிக்கிறம்.

உப்பிடி வெளிக்கிடுத்தாமல் நிண்டால் என்ன மாதிரி?.... தீடீரெண்டு கூப்பிட்டுவிட்டால் என்னெண்டு போறது?....

அம்மாவை வரச் சொல்லிக் கேட்டனான். அம்மா வரயில்லை. எங்கை வரச்சொன்னாலும் வெட்கப்படுவா. 'காதிலை கழுத்திலை ஒண்டும் இல்லாமல்' எண்டு ஏதோ அப்பாவுக்குச் சொல்லுவா. உப்பிடித்தான் போனமாதம் எங்கடை ஊர்க் கோயில் திருவிழாவுக்குக் கூட வரமாட்டன் எண்டிட்டா.

தரணியின்ரை அம்மாவும் வரவில்லைத்தான். ஆனால் ஹம்ஷாவின்ரை அம்மா வந்தவ. அவளை வெளிக்கிடுத்தவாம். எனக்கெனன்ன எங்கடை ரீச்சர் இருக்கிறா தானே. அவவும் அம்மா மாதிரித்தானே. என்னிலை நல்ல பட்சம்.

முட்டைக்கண்ணி மகிஷாவும் தாயோடை வந்து நிக்கிறாள். அவள் ஒரு நாலைஞ்சு நாள் எங்களோடை பயிற்சி எடுத்தவள். பிறகு சரியாகச் செய்யிறா இல்லை எண்டு எங்கடை ரீச்சர் நிற்பாட்டிப் போட்டா. அது கலியாணி ரீச்சருக்கு பிடிக்கயில்லை. முட்டைக் கண்ணியை மட்டுமில்லை வேறையும் மூண்டு பேரையும் தான் நிற்பாட்டியாச்சு. முட்டைக்கண்ணிக்கு பெரிய 'லெவல்' எங்களோடை எல்லாம் சேரமாட்டா. நடப்புக்காட்டுவா. தகப்பன் டொக்ரராம். அவ பெரிய இவ.

"ஏய்... முட்டைக்கண்ணியின்ரை தாய் அங்கை பாரன். "B" வகுப்பு கலியாணி ரீச்சரோடை பின்னாலையும் முன்னாலையும் இழுபடுறா" லாவண்ணிதான் எனக்கும் சொன்னாள். முட்டைக்கண்ணி மகிசா "B" வகுப்பு நாங்கள் "A" வகுப்பு இரண்டு வகுப்பையும் கலந்துதான் எங்கடை நிகழ்ச்சி

“இஞ்சை... ஏய்.... அங்கை பாரன் முட்டைக் கண்ணியின்ரை தாயும் கலியாணி ரீச்சரும் எங்கடை ரீச்சரை தனியாக் கூட்டிக்கொண்டுபோய் ஏதோ குசுகுசுக்கினம். பின்னாலை வாத்து முட்டைக் கண்ணியும் நிக்கிறாள்”.

லாவண்ணியும் எங்களோடை சேர்ந்து கொண்டு

சொல்லுறாள்.

“ஏய்..... முட்டைக் கண்ணியின்ரை அம்மாவும் ரீச்சர் வேலைதான். வேறை எங்கையோ படிப்பிக்கிறா. கலியாணி ரீச்சர், எங்கடை ரீச்சர் எல்லாரையும் தெரிஞ்சிருக்கும். அதுதான் கதைக்கினம் போலை”.

நான் அவையின்ரை கதையளை மறிச்சு சொன்னன். சரியெண்டு தலை ஆட்டுகினம்.

லாவண்ணியின்ரை அப்பா 'பாங் மனேச்சர்' , தரணியின்ரை அப்பா 'மாஸ்டர்'. ஹம்ஷாவின்ரை அப்பா 'கிளாக்கர்'. தனுஷியின்ரை அப்பா எங்கடை பள்ளிக் கூடத்திலை பெரிய அக்காமாருக்கு படிப்பிக்கிற 'சேர்' எல்லாரும் வந்திருப்பினம்.

எட்டிப் பார்த்தன். அங்காலை வெளியாக்கள் நிக்கிற பக்கமாக அப்பா நிக்கிறார். ஆசையா என்ரை நிகழ்ச்சியைபார்க்க முன்னுக்கு வந்து நிக்கிறார். அடிக்கடி என்ரை 'ஹவுஸ்' இருக்கிற பக்கமும் பார்க்கிறார். நான் நிக்கிறது தெரியேல்லைப் போலை கிடக்கு. தூரந்தானே.

'இன்ரோவல்' நிகழ்ச்சியிலை நல்லவடிவா ஆடவேணும். அது பாட்டுக்கு 'டாண்ஸ்' தானே.

இடைக்கிடை பரதநாட்டியம் மாதிரியும் சொல்லித் தந்தவை. எனக்கு நல்ல விருப்பமான ஆட்டம் அதுதான்.

அப்பா ஆக்களுக்குள்ளாலை எட்டி எட்டிப் பார்க்கிறார். என்னைத் தான் போலை.

என்ரை நிகழ்ச்சி முடிய அப்பாட்டை ஓடிப்போவம். என்ரை யூனிபோமையும், வெளிக்கிட்ட வடிவையும் பாத்திட்டுச் சந்தோசப்படுவார். உடனை ஆளைக்கொண்டு ஒரு 'கோண் ஐஸ்கிறீம்' வாங்கி யூனிபோமிலை ஊத்திப் போடாமல் குடிக்க வேணும்.

“ஏய்...... ரீச்சர் எல்லாரையும் கூப்பிடுறா..... வெளிக்கிட வரட்டாம். வாங்கோ.... நேரம் கிட்ட வந்திட்டுதாம்”.

தரணிதான் கூப்பிட்டாள். எல்லாரும் போறம். ஐயோ... நேரம் வந்திட்டுது. எனக்கு உடம்பெல்லாம் சூடேறுது மாதிரிக் கிடக்கு. மேகத்திலை பறக்கிற மாதிரிக் கிடக்கு. சப்பாத்துப் போட்டாச்சு தலை வடிவாக் கட்டிக் கொண்டுதான் வந்தனான். குழம்பி னாலும் தொப்பிபோட மறைக்குந்தானே. இனி என்ன நிகழ்ச்சிக்கெண்டு தைச்சு, முதல் போட்டுப்பார்த்த “யூனிபோம்” தானே போடக்கிடக்கு. அது எனக்கு நல்ல அளவு, வடிவு. அதைப் போட்டால் சரி. பிறகு கை ரண்டிலும் கலர் கலரா குஞ்சங் கட்டுறது. அவ்வளவு தான்.

வெளிக்கிடுற இடத்திலை முட்டைக் கண்ணி யின்ரை தாய் நிக்கிறா. பிறகும் ஏதோ கலியாணி ரீச்சரோடை குசுகுசுக்கிறா.

எங்கடை ரீச்சர் எனக்கு 'யூனிபோம்' போட்டு விடுறா. என்னைப்பார்த்து ஏதோ கதைக்கினம் எனக்கு 'யூனிபோம்' வடிவாக்கிடக்குப் போலை அதைத்தான் கதைக்கினமாக்கும்.

எட்டிப் பாக்கிறன் அப்பாவை சின்னனாத் தெரியுது. இப்பிடியே பார்த்தால் அப்பா என்னைத் தூக்கிக் கொஞ்சுவார். முடிஞ்சாப் பிறகு போறது தானே.

எங்கடை ரீச்சர் தனியாத்தான் எல்லாஞ் செய்யுறா. பாவம். கலியாணி ரீச்சர் உதவி செய்யிறா இல்லை. அவ அவையோடை கதைச்சுக் கொண்டே நிக்கிறா. முட்டைக் கண்ணி மகிஷா என்னைத் தான் பாக்கிற மாதிரிக் கிடக்கு சிரிக்கிறா இல்லை.

“எல்லாரும் உப்பிடியே குழப்பாமல் நிக்க வேணும் ரீச்சர் முன்னுக்கு நிப்பன். 'லைன்' பண்ணி நில்லுங்கோ. நான் விசில் ஊதிப்போட்டு கையைக் காட்டுவன். நீங்கள் துள்ளித்துள்ளி ஓடி 'கிறவுண்ட்'க் குள்ளை போகவேணும் என்ன?...”

ரீச்சர் தான் சொல்லிப்போட்டு வெளியிலை போட்டா. நாங்கள் எல்லாரும் வண்ணத்திப்பூச்சியள் மாதிரி கையிலை கட்டின குஞ்சங்களை அசைச்சுப் பாத்துக் கொண்டு நிக்கிறம்.

ரீச்சர் வெளியிலை இருந்து கையைக் காட்டுறதை எதிர்பார்த்துக் கொண்டு நிக்கிறம். எல்லாரும் 'றெடியா' நிக்கினம்.

திடீரெண்டு என்னை ஆரோ பிடிச்சு இழுக்கினம். கலியாணி ரீச்சர் தான். மறைவிலை கொண்டு போய்

மளமளவெண்டு என்ரை தொப்பியையும், யூனி போமையும் கழட்டுறா. முட்டைக்கண்ணிக்கு அதைப் போடுகினம். அவளின்ரை தாயும் சேர்ந்து தான். எனக்கு எங்கடை ரீச்சரைக் கூப்பிட வேணும் போலை கிடக்கு. ஆனால் முடியேல்லை. குரல் வருதில்லை மகிஷாவுக்கு முகமெல்லாம் 'றோஸ் பவுடர்' அப்புகினம் முட்டைக் கண்ணி சிரிக்கிறாள்.

எனக்கு அழுகை வருது. உள்ளுக்கை போடுற 'பெற்றிக் கோட்' டோடை நிக்கிறன். எல்லாப் பிள்ளை யளும் பாக்கிற மாதிரிக் கிடக்கு. வெக்கமாக்கிடக்கு.

“உது உந்தக் கிழக்கு றோட்டிலை இருக்கிற பிள்ளை. இங்கத்தை ஆக்களில்லை. அவவின்ரை 'கிளாஸ்' ரீச்சரின்ரை செல்லம். தாய் யூனிபோமுக்கு அரைவாசிக் காசுதான் தந்தவ. மிச்சம் பிறகாம். அதுகள் உப்பிடித்தான். ஆக்களைத் தெரியுந்தானே உனக்கு. இது களுக்கு ஏன் இதெல்லாம்?.... உவை வந்து இஞ்சை ஒண்டும் நியாயம் கேட்டுப் படைக்கப் போறதுகிடை யாது”

முட்டைக் கண்ணியின்ரை தாய்க்குச் சொல்லிக் கொண்டே முட்டைக்கண்ணியை 'லைனிலை' இடையிலை செருகிவிடுறா கலியாணி ரீச்சர்.

தனுஷி, தரணி, லாவண்ணி எல்லாரும் என்னைக் கவலையோட பாக்குதுகள்.

எனக்கு அழுகை வந்தது. கண்ணை கண்ணீர் மறைச்சுக் கொண்டு நிறைஞ்சு வந்தது.

ரீச்சர் விசில் ஊதுறது அடைச்ச காதுக்குள்ளை

கேக்கிறது மாதிரிக் கேக்குது. தலையெல்லாம் சுத்திற மாதிரிக் கிடக்கு.

எல்லாரோடையும் சேர்ந்து முட்டைக்கண்ணியும் துள்ளிக் கொண்டு ஓடுகிறாள். ரீச்சரும் கவனிக்கேல்லைப் போலை.

நான் அழுகிறன். கண்ணீர் வருது. என்ர வடிவான யூனிபோமை மாத்திப் போட்டிட்டினம். எங்கடை ரீச்சருக்கு சொல்லி அழவேணும் போலை கிடக்கு. வெளியிலை போக வெட்கமாக்கிடக்கு 'பெற்றிக் கோட்டுக்' குள்ளாலை 'நிக்கர்' தெரியுது. சப்பாத்தோடையும் பெற்றிக் கோட்டோடையும் எப்பிடி வெளியிலை போறது. வெள்ளைச் சட்டையையும் ரீச்சர் வாங்கி உள்ளுக்கை வைச்சிட்டா.

'ஸ்பீக்கரிலை' எங்கடை 'இன்ரோவல்' நிகழ்ச்சிப் பாட்டுக் கேக்குது. அப்பா என்னை தேடித் தேடிப் பார்ப்பார்.

நானும் எட்டி எட்டிப் பாக்கிறன். அப்பாவை இப்ப தெரியேல்லை. எல்லாரும் 'இன்ரோவல்' நிகழ்ச்சி பாக்கிறதுக்கு முன்னுக்கு திரண்டு குவிஞ்சு கொண்டு நிக்கினம்.

என்னைக் கவனிக்கினமில்லை.

நான் அழுது கொண்டே நிற்கிறன். பாட்டு கேட்க கேட்க இன்னும் நல்லாத் தலை சுத்துறமாதிரிக் கிடக்கு.

கண்ணுக்குள்ளை நிண்ட கண்ணீருக்குள்ளாலை

அப்பா கலங்கலாத் தெரியிறார். அப்பா தான். என்னைத் தேடி வந்திட்டார்...... என்னைக் கண்டவுடனை அவருக்கு கண்கலங்கியது.

என்ன நடந்ததெண்டு கேட்கிறார். நானும் அழு தழுது சொல்லுறன்.

என்னைத் தூக்கி தோளிலை போட்டார். "வாடா செல்லத்துக்கு ஐஸ்கிறீம் வாங்கித் தாறன்" எண்டு என்ரை மனசை மாத்தப் பாக்கிறார். எனக்கு ஒண்டும் தேவை யில்லை எண்டு சொல்லி அழுறன்.

அப்பா என்னை வெளியிலை கொண்டுபோறார். வெளியிலை சோடிச்சுக் கிடக்கிறதெல்லாம் என்ரை கண்ணீருக்கை கரையிற மாதிரிக்கிடக்கு. வாசலிலை ரண்டு பக்கமும் நிக்கிற பெரிய மரங்கள் என்ரை தலை யிலை விழுறமாதிரிக் கிடக்குது.

அப்பா என்னைத் தன்ரை சைக்கிளிலை ஏத்தி இருத்திறார்.

கைதட்டிக் கேக்குது 'இன்ரோவல்' நிகழ்ச்சி முடிஞ்சுது போலை.

அப்பா சைக்கிளிலை ஏறி உழக்கத் தொடங்கு கிறார்.

எங்கடை ரீச்சர் வாசல் வரைக்கும் ஓடிவாறா என்ரை பேரைச் சொல்லிக் கூப்பிடிறமாதிரிக் கிடக்குது.

அப்பா திரும்பிப் பார்க்கமாமல் ஓடிக்கொண்டு போறார். பாவம்.... ரீச்சர் என்னோடை கதைக்கத்தான் வந்திருப்பா போலை.

ஞானம், ஓகஸ்ட் -200

# மானக்கேடு

08

எங்கள் பாடசாலையின் ஒரு ஒதுக்கான இடம் அது. இடிந்து போய் கிடக்கும் அந்தக் கட்டடத்தின் பின்புறம் இருந்த புதர் மண்டிப்போன பழைய கழிப்ப றையின் ஓரமாக ஒதுங்கி நின்று தன் உள்ளத்து ஏமாற்றங்கள் யாவும் கண் வழியே கொட்டித்தீர அழுது கொண் டிருக்கும் அவளை வேடிக்கை பார்க்க முனையும் மூன்றாம் வகுப்புப் பிள்ளை களை விரட்டிக் கொண்டிருக்கும் போதே,

"அவவுக்கு கடைசியிலை கொஞ்சம் லெவல் வந்திட்டுது ரீச்சர்.... அதுதான் கோட்டை விட்டிட்டா. அவ வகுப்பு ரீச்சரின்ரை செல்ல முந்தான் காரணம். எல்லாருஞ் சேர்ந்து அவளைக் கெட்டிக்காரி, கெட்டிக் காரி எண்டு சொல்லி"...

என்று மங்களம் ரீச்சர் தேவிகா ரீச்சருக்கு சொல்லிகொண்டு போவது

எனது காதுகளில் மாத்திரம் தான் விழுந்திருக்க வேண்டும். அந்தப் பிள்ளையின் காதுகள் அதைக் கேட்டதாகத் தெரியவில்லை.

பிஞ்சுமனதின் சஞ்சலத்தை உணராத மங்களம் போன்ற எத்தனை பேர் இருக்கிறார்கள். முதலாம் வகுப்புப் பிள்ளை ஒன்று சூரிய உதயம் பற்றி பத்து வாக்கியங்கள் சொல்லவில்லை என்பதற்காக அந்தப் பிள்ளைக்கு அடிபோட்டு நீண்ட நேரம் முட்டிபோட்டு இருக்கவைத்த அந்த மங்களம் ரீச்சருக்கு இந்தப் பிஞ்சுப் பிள்ளைகளின் உள்ளத்தை விளங்கிக் கொள்ள முடியுமா என்ன? நீண்ட விடுமுறைக்காகவும், சம்பளத்துக்காகவும் வந்தவள் அவள். கற்பூர வாசனை பற்றி கழுதைக் கென்ன?......

பாவனா. அந்த அழகிய பெயர் என்னை என்றும் ஆதர்சயப்படுத்தும். அவளுக்கு நான் வகுப்பாசிரியராக வந்து இரண்டு வருடங்களாகின்றது. ஐந்து தவணைகள் முழுவதாக என் ஆன்மாவில் லயித்துவிட்ட பிள்ளை களில் அவள்தான் முதல் தரத்தில் இருப்பது போல ஓர் உணர்வு. அவளைக் காணும் போதிலெல்லாம் பிள்ளைகளே இல்லாத என்னுடைய நெஞ்சக்குளியை தாய்மை உணர்வொன்று நிறைத்துப் பிரவகிக்கும். அவர் கூட ஒரு நாள் காலையிலே,

“ஏனப்பா.... உன்ரை வகுப்பிலை பாவனா எண்டு ஆரோ படிக்குது போலை. ராத்திரி ஏதோ கனவுகண்டு பாவனா கவனம்.... பாவனா கவனம்.... எண்டு வாய் புசத்தினனி...” என்று சொன்னார்.

சில சமயங்களில் நான் தனிமையிலே ஓய்வாக

இருக்கும் வேளைகளில் எனது வகுப்புப் பிள்ளைகளின் குறும்புத்தனத்தை மீள நினைத்து இன்புறுவதும் உண்டு. அவ்வேளைகளில் கூட அந்த இருபது பிள்ளைகளைக் கொண்ட வகுப்பில் முகிழ்த்து மிதப்பது பாவனாவின் நினைவுகள் தான். உள்ளூர எனக்குள் இது ஒருவித சந்தோசத்தை தந்தாலும் நான் அன்பு காட்டுவதில் கூட பாரபட்சமாக நடந்து கொள்கின்றேனா என்ற ஒருவித ஏக்கமும் மனதில் எழுவதுண்டு. என்னை நான் சுதாகரித்துக் கொள்வேன்.

இதுவரை இவர்களைப்போல ஆறு வகுப்புகள் என்னிடம் வந்து போயிருக்கின்றன. அந்தப் பிள்ளைக ளோடு பழகிய நாட்களும் பசுமையான வைதான். எனினும் பாவனாவைப் போல வேறுயாரும் என் மனதின் ஆழம்வரை வேர் இறக்கியதில்லை.

உறவாடும் உள்ளங்களில் உதட்டோடு முடிபவை சில. கண்களோடு கரைபவை பல. உள்ளத்தோடு லயிப்பவை இன்னும் சில. இதயத்துள் இறங்குபவை ஒன்றுரண்டு தான். பாவனா அந்த ஒன்றுரண்டு என்ற வகைக்குள் எனக்குள்.

ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு விதத்தில் எம் மனதில் தம்மைப் பதியவைத்துவிடும். பாவனா எனக் குள்ளே நெருக்கமாக காரணமான சம்பவம் இன்றும் என் மனதில் பசுமையாக உள்ளது.

அவள் சென்ற வருடம் நவராத்திரி கால மனனப் போட்டியில் ஆத்திசூடி ஒப்புவிப்பதற்காக அவளின் சொற்சுத்தத்தைப் பரிசீலித்த போது மூச்சு விடமால் பெரிய மனுசித் தோரணையுடன் முதல் முப்பது

வரிகளையும் ஒப்புவித்த அழகு. 'ஏற்பது இகழ்ச்சி' என்பதை 'ஏற்பது நிகழ்ச்சி' என்றும் 'நப்போல் வளை' என்பதை 'ஞப்போல் வளை' என்றும் தவறாக உச்சரித்த அவளின் மழலையை திருத்த நான் படாதபாடுபட்ட பரிதாபத்தை பார்த்து,

"ரீச்சர்.... நான் வீட்டிலை வடிவாகச் சொல்லிப் பழகிப் போட்டியிலை சரியாகச் சொல்லி பரிசு வாங்குவன்" என்று கூறிய வார்த்தைகளும் அதன் பின் பழகிப் போட்டியிலை கலந்து முதலாமிடம் பெற்று வந்து, ரீச்சர் எனக்கு முதல் பரிசு ஆத்திசூடி மனனத்தில் என்று கூறிச் சிரித்து சற்றுத் தாமதித்து "உனக்கு நாக்கு பிரளுதில்லை... நாக்கு வழிக்கிற தில்லை..... நாளைக்கு நாக்கை வழிச்சிட்டுவா....." என்று அவளின் தவறு களைத் திருத்திய போது கோபத்தின் உந்தலால் நான் பேசிய வார்த்தைகளை என்னைப் போலவே பாவனை செய்து பேசிக் காட்டிச் சிரித்தபடி ஓடி மறைந்தாள்.

அந்தச் சம்பவம் என்மனதில் மிதந்து வரும் வேளைகளில் நானும் பலமுறை வெள்ளையாகச் சிரித்துக் கொள்வேன். பிள்ளைகள் மாதிரி.

பிள்ளைகளோடு உறவாடுவதில் உள்ள சுகம் அற்புதமானது. அவர்களின் கபடமற்ற உரையாடல்கள். வெள்ளைச்சிரிப்பு. இதயம் நிறைக்கும் அன்பு. அவை ஆத்மாவின் சுரங்கள்.

இதுவும் சென்ற வருடம்தான். ஆசிரியர் தினத்தன்று நடந்தது. எங்கள் பள்ளிக்கூடம் ஆசிரியர் தினத்தை இந்திரவிழாவாகக் கொண்டாடி மதியம் வரை கலை நிகழ்ச்சி பார்த்து, புரியாணிசாப்பிட்டுப்

புகைப்படங்கள் எடுக்கும் வசதிபடைத்ததல்ல. சுனாமி சிதைத்த வாழ்வின் எச்சசொச்சங்களுடன் தகரக் கொட்கையினுள்ளும் மரநிழலிலும் கோயில் மடத்திலுமாக இயங்கும் பாடசாலை தான். என்றாலும் உயிர்த் துடிப்பான அந்த ஒருமணிநேர ஆசிரியர் தின நிகழ்வின் முடிவில் வெண்ணிறப் பட்டாம் பூச்சியாய் என்னிடத்தில் ஓடி வந்த பாவனா "ரீச்சர் குனியுங்கோ" என்று கூறி வாஞ்சையுடன் என் கன்னத்தில் முத்தமிட்டு என் கையுள் ஏதோ ஒரு மிகச் சிறிய பொருளைத் திணித்து விட்டு ஓடிய காட்சி. ஓர் அழகான "சிலைட்."

இன்றும் பின்னல் போடும் போது பாவனா தந்த அந்த "சிலைட்" டைத்தான் போடுவேன். இவருக்கும் அது நன்றாகப் பிடிக்கும்.

"ரீச்சர் ...... பாவனா தந்த சிலைட் வடிவா?.... அவ ரீச்சர்.... அவவின்ரை அம்மா கொடுக்கிற காசிலை..... ரண்டு ரண்டு ரூபா சேர்த்து வைச்சு நாப்பது ரூபாவுக்கு அதை வாங்கினவா?" என்று இன்னொரு பிள்ளை கூறிய வார்த்தைகள் அந்தப் பிஞ்சுக்குள் பொதிந்து கிடக்கும் உயிர்த்துடிப்பான அன்பை உணர்த்தியது.

உண்மையில் ஆசிரியத் தொழிலின் மகத்துவத்தினை எனக்குள் எடுத்துக் காட்டியது அந்தப் பிஞ்சின் அன்பு. என்னைத் தன்னுள் உள்வாங்கி தன்னை என்னுள் விதைத்துவிட்ட அந்தப் பிள்ளை என் நாடித் துடிப்புக்களோடு ஒன்றித்துவிட்டாள்.

அவள் படிப்பிலும் மிகுந்த கெட்டிக்காரி. வகுப்பிலே செய்யும் புதிர்க் கணக்குகள் அவளுக்கு

மிகவும் பிடித்தமானவை. பஞ்சதந்திரக் கதைகள் அடங்கிய கதைத் தொகுதிகளை ஒவ்வொரு நாளும் பாட சாலை நூலகத்திலிருந்து கடன் வாங்கிச் செல்வதைக் கண்டிருக்கின்றேன். இறுதியாக நடந்த திருக்குறள் மனனப்போட்டியில் முதல் பத்து அதிகாரங்களையும் பொருளோடு ஒப்புவித்ததைப் பார்த்து விட்டு எங்கள் அதிபர் என்னை பாராட்டிச் சென்றார். பிள்ளைகளின் திறமைகள் தானே ஆசிரியர்களின் இருப்புக்கும் வாழ்வுக்கும் அர்த்தம் கொடுக்கின்றன.

என்னுள் நிறைந்த பாவனா அழுதுகரைந்து போகின்றாள். அவளின் உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட குமுறல்களை நெஞ்சுக் கூட்டினுள் அடக்கிவைத்து விம்மிப்பொருமி அழுதுகொண்டே இருந்தாள். என்னால் ஆறுதல் கூறி அவளின் அழுகையினை நிறுத்தி விட முடியவில்லை.

"அம்மா....... அழாதையடா..... ரீச்சர் இவளவு சொல்லியும் அழுகிறியள். எல்லாப் பிள்ளையளும் பார்க்கப்போகினமெல்லே அழக்கூடாதடா..."

அவள் என்னுடைய வார்த்தைகளைப் பொருட் படுத்தாமல் அழுது கொண்டேயிருந்தாள். "இப்ப என்னத்துக்கடா அழுகிறியள்?... எங்கடை பள்ளிக் கூடத்திலை மட்டுமே இப்படி? எல்லா இடமுந்தானே... நீங்கள் நல்ல 'மாக்ஸ்' தானே எடுத்திருக்கிறியள். அது போதாதா? உப்பிடித்தான் போன வருஷமும் ஒரு பிள்ளை கெட்டிக்காரி ஆனால் 'கட்டவுட்' கூட எண்டதால 'பாஸ்'பண்ண முடியேல்லை. உந்த மாக்ஸ் ஒரு பிள்ளைக்கு வடிவாக் காணுமடா...... அழக்கூடா தடா..... ரீச்சர் சொல்லுறனெல்லே....."

என் மனவிருப்பை மறைத்து வைத்துக் கொண்டு பிள்ளையை தேற்ற முற்படுகின்றேன். பாவனாவின் அழுகை அதிகரித்ததே ஒழிய அவள் தேறுவதாகத் தெரியவில்லை.

"செல்லமெல்லே...... என்னடா அழக்கூடாதடா நீங்கள் ரீச்சரோடை வாங்கோ வீட்டை கொண்டு போய் விடுறன். இனியும் நீங்கள் அழுதால் ரீச்சரும் அழுதிடுவன்."

இந்த வார்த்தைகளின் பின்னால் என்னிடம் நிறைந்திருந்த மௌன இடைவெளி ஒன்றில் அவளின் அழுகை சிணுங்கலாகச் சிதைந்து கொண்டிருந்தது.

"நான் வீட்டை போகமாட்டன் ரீச்சர்!" மிக உறுதியுடன்.

ஏன்?.....

"வீட்டை போனால் அம்மா....." மீண்டும் அழுகிறாள்.

"மாக்ஸ் போதாது எண்டு அம்மா ஏசுவாவா?.....

அப்பிடி ஏசமாட்டா.....

ஏன் அம்மா பிள்ளையோடை வரயில்லை?...."

"............................"

என்னடா சொல்லுங்கோவன்...... அவளின் உள்ளத்தைக் கிளறி காரணத்தை அறிந்து விட வேண்டும் என்ற எண்ணத்தில்

"ரீச்சர்.... அம்மா மருந்து குடிச்சுச் செத்துப் போவா...."

"...................." நான் மௌனியாகச் சிலைத்துவிட்டேன்.

"ரீச்சர்..... நேற்று எங்கடை பக்கத்துவீட்டுச் சிந்துவின்ரை மாக்ஸ் பாத்து அவைக்குத் தெரியும். சிந்து பாஸ். அப்பவே அம்மா சொன்னவா சிந்துவை விட நீதான் கெட்டிக்காரி..... உன்னைப் பெரிய பள்ளிக் கூடத்திலை சேர்த்து படிப்பிக்கிறனெண்டு கொப்பா சொன்னவர். நீ பாஸ் பண்ணாவிட்டால் மானக்கேடு நான் மருந்து குடிச்சுச் சாவன்..... நீ பாஸ் பண்ணாவிட் டால் கொப்பாவும் வெளிநாட்டிலை இருந்து வரவும் மாட்டார். உன்னோடை கதைக்கவும் மாட்டார். இங்கை நானும் செத்துப்போவன். பிறகு உன்னை ஆர் பாக்கிறது எண்டு சொன்னவா........"

அவளது வார்த்தைகள் விக்கலாகி வெளிவந்தது. நெஞ்சம் பொருமியபடி மீண்டும் அழத்தொடங்கினாள்.

நீர்த்திரை ஒன்று என் கண்களை மறைப்பது போலிருந்தது.

அந்தக் குழந்தை மனத்தின் ஏக்கம் அறியாத பெற்றாரா அவர்கள்? ஒரு பிள்ளையின் மனத்தைச் சிதைக்கின்ற இவர்களுக்கு என்ன கௌரவம்?

மங்களம் ரீச்சரின் வார்த்தைகளால் என்னுள் எழுந்த எரிமலை அடங்கி மௌனித்தது.

அந்த வெள்ளை மனதில் ஏக்கத்தை விதைத்து விட்டு......... எதிர்பார்ப்புக்களை சுமக்க வைத்து விட்டு...... உணர்வுகள் எந்திரமாகிப்போய் விட...... கௌரவம் பற்றிய கனவுகள் இவர்களுக்கு,

"வாடா.... நானும் வாறன் உங்கடை வீட்டை அம்மாவோடை ரீச்சர் கதைக்க வேணும்...." என்று கூறியதும் அவளின் முகத்தில் திடீரென ஒரு வித மலர்வு.

நான் "ஷோட் லீவுக்காக" அதிபரின் அலுவலகம் நோக்கி நடக்கின்றேன். கண்களை துடைத்தபடி அவளும் என்னைத் தொடர்ந்தாள்.

பாடசாலையின் எந்திரத்தனமான இயக்கத்தினை உறுதிப்படுத்தும் வகையில் அடுத்த பாடத் தொடக்கத்துக்கான மணி ஓசை சர்வசாதாரணமாய் ஒலித்தது.

மல்லிகை, மே 200

09

# தூவானம்

'கிரிக்கெற்' விளையாடுகின்ற 'ஸ்ரேடியம்'போன்ற ஒரு இடத்திலே மேகத்தின்'உச்சாரத்தில்' இருந்து ஒரு பிளேன் தலைகுத்தென இறங்கி வந்தது. நடு 'ஸ்ரேடியத்தில்' ஒரு பனையளவு உயரத்திலிருந்து படிகளின் வழியாக பல "கிரிக்கெட்" வீரர்கள் - சச்சினைப் போலவும், ஜெயசூர்யா போலவும் பலர் இறங்கி வருகிறார்கள். கடைசியாக அப்பா... ஆ... அப்பாதான் பெரிய ஒரு ' ட்கேசும்' கிரிக்கெட் 'பற்றும்' கொண்டு இறங்கி வருகிறார். அம்மாவோடு கிரிக்கட் பார்க்கவந்த நான் கையைப் பறித்துக் கொண்டு பாய்ந்தடித்து அப்பாவிடம் ஓடுகிறேன். "டேய்.. புடியடா.. புடியடா." என்றவாறு என்னை துரத்திக் கொண்டு ரம்யன் ஆமிக்காரன் போல உடுப்பு போட்டுக்கொண்டு ஓடி வருகிறான். அவனால் என்னை பிடிக்க முடியவில்லை. குனிந்து கல்லொன்றை

எடுத்து எறிகின்றான். கல்லு அப்பாவின் தலையிலே பட்டு இரத்தம் 'குபீர்' என பாய்ந்து அப்பா 'தொப்' என்று கீழேவிழுகிறார். ஐயோ... அப்பாவைச் சுத்தி ரம்யனைப் போல் உடுப்புப் போட்ட பலர் வந்து நிக்கினம். சச்சின் போலை ஆமி, ஜெயசூர்யாவைப் போல ஆமி... அப்பாவுக்கு பக்கத்திலை பெரிய கிடங்கை வெட்டினம் தாழ்க்கப் போயினம் எண்டுசெல்லினம்..."

துடித்து விழித்தான் சஞ்சீவன். அவனுக்கு உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கியது. அதிகாலைப் பாதித்தூக்கத்தில் வெடியோசை கேட்டு எழுந்தவன் போல படபடத்தான். அவனது மனம் நிலைகொள்ளாமல் உருக்குலைந்தது. "ஐயோ...." என்று அழுது விடலாமோ? என்று தோன்றியது. படுக்கையில் தன் முதுகின் கீழாக பல்லாயிரம் புழுக்கள் நெளிவது போன்ற உணர்வு. கண்களை இறுக மூடிக்கொள்கிறான் முடியவில்லை. எழுந்து உட்கார்ந்தான். தன்னை நிதானித்துக் கொண்டு மீண்டும் மெதுவாக படுக்கையிலே சாய்ந்து சுவரிலே மாட்டப்பட்டிருந்த படத்தினை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்கள் உடைப்பெடுத்தன. உயிர் கரைந்து கண்களின் வழியே ஊத்துண்டது.

"அப்பா எனக்கு பயமாகக் கிடக்குது. நீங்கள் வரமாட்டியளே?.. அம்மாவும் நித்திரை. அம்மாவைக் கூட எனக்குப் பிடிக்கேல்லை. அம்மா பொய்தான் சொல்லுறாபோலைகிடக்கு. அம்மா என்னிலை சரியான பாசம் தான். ஆனால் எனக்கு பொய்தானே சொல்லுறா. நீங்கள் எனக்கு கிரிக்கெட் 'பற்' 'போல்' எல்லாம் வாங்கி

வருவியளாம்... அம்மா சொல்லுறது உண்மையே அப்பா.."

சஞ்சீவனின் மனம் அப்பாவோடு அழுதழுதே கதைத்துக் கொண்டது. கண்வழியே வழிந்த கண்ணீர் காதோரம் தலையணை வரை நனைத்துக் கொண்டிருந்தது.

"அப்பா.... நீங்கள் எப்ப வருவியள்... எல்லாரும் வெளிநாட்டாலை வருகினம். நீங்களும் வரலாம் தானே. ரம்மியன்ரை அப்பாவும் வந்திட்டார். பிரவீனாவின்ரை அப்பாவும் வாறகிழமை வாறாராம். நீங்களும் வரலாம் தானே. வரேக்கை எனக்கு நிறையச் சமான்கள் வாங்கி வருவியள் தானே. இல்லாட்டி ரம்மியன் சொன்ன மாதிரி.... உங்களை?...."

சஞ்சீவனுக்கு மனம் துடியாய் துடித்தது. கண்களை இறுக மூடிக்கொண்டான். ரம்யன் சொன்ன வார்த்தைகள் அவனை வரட்டி எடுத்தன. விரியமுனைந்த எண்ணங்களை மனத்தினுள் இறுகப் பூட்டிக்கொள்ள முனைந்தான் முடியவில்லை. கண்களை விழித்து அப்பாவையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் போல ஒரு வித உந்தல்.

படமாகிச் சுவரில் தொங்கிய அப்பா அங்கிருந்த 'நைற்பல்ப்' கசிவிக்கும் மெல்லிய ஒளியிலும் அவனைப்பார்த்துச் சிரிப்பது தெரிகின்றது. "அப்பா... நான் கனவுகண்டு பயப்பிடுகிறதை பார்த்துச் சிரிக்கிறார் போலை" தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

"சஞ்சி... என்னப்பா பயந்திட்டீங்களா?... கனவுதானே பயப்பிடக்கூடாது இஞ்சை பாருங்கோ...

அப்பா இருக்கிறன் பயப்பிடக்கூடாது என்ன?...."

தன்னைப் பார்த்து அப்பா சொல்லுவதைப் போல ஒரு பிரமை. "ரம்மியன்ரை அப்பாவும் இப்படித்தானே வாங்கோ போங்கோ...... எண்டு ரம்மியனோடை கதைக்கிறவர். என்ரை அப்பாவும் அப்படித்தான் கதைக்கிறார்"

"சஞ்சி உனக்கு தெரியுமா எங்கடை அப்பா என்னை ஒரு நாளும் 'டேய்' எண்டு கூப்பிடுறதே இல்லை. அம்மா என்னை 'டேய்' எண்டு கூப்பிட்டாலும் அப்பாவுக்குப் பிடிக்காது. உடனேயே அம்மாவை ஏசுவார் தெரியுமா? கோபம் வந்தால் கூட 'தம்பி ரம்யா' எண்டு தான் கூப்பிடுவார்."

என்று ரம்யன் தன்னுடைய அப்பாவைப் பற்றிக் கூறிய வார்த்தைகளிலுள்ள இனிமையை மனத்தினால் குடித்தது போலவும், அப்பா தன்னுடன் கதைப்பதைப் போலவும் உணர்ந்தான் சஞ்சீவன்.

மின்குமிழ் உமிழ்ந்து கொண்டிருந்த சந்தனம் குழைத்த ஒளி அப்பாவின் முகத்தில் பட்டு பிரகாசித்தது. அப்பாவின் முகத்தின் சாந்தமும் தீட்சண்யமும் உள்ளுணர்வை நிறைத்தது. இப்போது கனவின் ஏக்கம் கரைந்து வடிந்தது.

"டேய் சஞ்சி.. என்ரை அப்பா நல்ல வடிவாடா அப்பான்ரை சொத்தையிலை தடவினா பஞ்சுமாதிரி. நான் அப்பாவின்ரை மடியிலை ஏறி நிண்டு கொண்டு அவற்றை சொத்தையிலை 'உம்பா' கொஞ்சுவன். அப்பாவுக்கு அது பிடிக்கும். "ரம்யா. அப்பாவுக்கு உம்பா தாறிங்களா?...." எண்டு சில நேரம் அவரே

கேட்பார்." என்று ரம்யன் சொன்ன வார்த்தைகள் அவனது மனத்தை உரசின.

என்ரை அப்பாவும் நல்ல வடிவுதானே. ரம்யன்ரை அப்பாவை விட என்ரை அப்பாதான் வடிவு. அப்பாவின் முகம் எந்தநேரமும் சிரிச்சபடிதான். அப்பாவின்ரை மீசை நல்ல வடிவான மீசை. தொட்டுப்பார்க்க வேணும் போல ஆசையா இருக்கும். ரம்யன்ரை அப்பாவுக்கு சாடை மொட்டை விழுந்திட்டு. என்ர அப்பாவின்ரை தலைமயிர் அந்த மாதிரி"

அப்பாவின் அழகை "பிறேமினுள்" சிறைப் பிடித்த புகைப்படத்தில் அனுபவித்துக் கொண்டிருந்தான் சஞ்சீவன். கறுப்பு வெள்ளை புகைப்படம். அப்பாவின் நெற்றியிலே அம்மா ஒரு நாள் விரதமிருந்த வேளை அப்பாவை வணங்கி இட்டு வைத்த பொட்டு. நல்ல அழகான ஒரு மாலை போட்டு அப்பா எடுப்பான தோற்றத்தோடு இருந்தார்.

அப்பா கறுப்போ வெள்ளையோ? வளத்தியோ கட்டையோ? தெரியாது. அம்மா ஏன் அப்பாவைக் கும்பிடுகிறா? ஏன் பொட்டு வைச்சா? செத்தவையின்ரை படத்துக்குத் தானே பொட்டு, மாலை எல்லாம் போடுறது எண்டு 'நேசரியிலை' ரீச்சர் ஒரு நாள் சொன்னவ, அப்ப அப்பா?.. சீச்சி... கடவுளின்ரை படத்துக்கும் பொட்டு மாலை எல்லாம் போடுறவைதானே.

அம்மாவுக்கும், எனக்கும் அப்பா கடவுள் மாதிரித்தானே, அது தான் அம்மா அப்பாவை பொட்டு வைச்சு மாலை போட்டு கும்பிட்டிருப்பா போலை. அல்லாட்டில் ரம்மியன் சொன்னது போல அப்பா?..

"எங்கடை பக்கத்து வீட்டு வினோதரனின்ரை அப்பா வேறை இடத்துக்குப் வேலைக்குப் போட்டு வாறவர் தானே. அவர் அவனுக்கு சின்னக் கதைப்புத்தக மெல்லாம் வாங்கிவந்து குடுக்கிறவர். நல்ல நல்ல உடுப்புக்களெல்லாம் எடுத்து வந்து குடுப்பார். அவனை தன்ரை சயிக்கிளிலை ஏத்திக் கொண்டு திரிகிறவர். அவனுக்கு இரவிலை படிப்பிச்சு குடுக்கிறவர். சில நேரங்களில் சாப்பாடு கூட தீத்திறதை நான் ஆசைப்பட்டு பார்க்கிறனான். என்ரை அப்பாவும் வெளிநாட்டாலை வந்து என்னை மடியிலை இருத்திக் கதை சொல்லித் தருவாராம். சாப்பாடு தீத்தி விடுவாராம். வினோத னின்ரை அப்பா அவனை கோயிலுக்கு கூட்டிக் கொண்டு போறதைப் போலை என்ரை அப்பாவும் என்னை கூட்டிக் கொண்டு போவாராம். இப்படி யெல்லாம் சொல்லி அம்மா ஏமாத்திப் போட்டா போலை"

அவனது மனம் மீண்டும் முகாரித்தது. படிப் படியாக பொழுதும் புலரத்தொடங்கியது. நேற்று ரம்யன் சொன்ன அந்தச் சுமையான வார்த்தைகளின் பழு இந்தக் கனவின் பின்னர் அப்பாவின் படத்தை பார்க்கப் பார்க்க சுவாசத்துளை வழியே இறங்கியது.

"அம்மாவை எழுப்பி கேட்டு விடலாம்" என்று எண்ணியவாறு தாயை தட்டி எழுப்பினான்.

அழுத விழிகளின் அர்த்தங்கள் தன் மனதில் கேள்விக்குறியாகி நிற்க, தாய் துடித்துப் போனாள்.

"என்னப்பா சஞ்சி.. என்ன ராசா என்னத்துக்கு அழுகிறியள் சொல்லுங்கோ. ஏனப்பு கனவுகினவு கண்டு பயந்திட்டியளே?.. ஏன் அம்மாவை எழுப்பவில்லை.

உப்பிடி அழுது கிடக்கு. என்னப்பு"

நம்பிக்கைகளின் சிதைவால் அவனது நெஞ்சை பிளந்து பீறிவரும் வார்த்தைகள் தொண்டைக் குழியோடு வலுவிழந்து விடவே பச்சாதாபத்துடன் தாயின் முகத்தைப் பார்த்தான். இதயத்தைப் பிழிந்து ரத்தத் துளிகள் கண்ணீராய் பனித்துக் கொட்டின. தாய் அந்தரித்தாள்.

"அம்மா என்ரை அப்பா எங்கையம்மா?... செத்துப் போனாரே?...

தாய் இடிந்து போனாள். மௌனியானாள்.

"அம்மா நான் அப்பா எங்கை எண்டு கேட்ட நேரமெல்லாம் அப்பா வருவார் எண்டு பொய் சொல்லிப் போட்டியள். என்னை ஏமாத்திப் போட்டியள் என்ன?... அம்மா என்ரை அப்பா வெளிநாட்டிலை இல்லையாம் செத்துப் போனாராம்?..."

உயிர் உருக அழுத அவனை கட்டுப்படுத்த முடியாத தாயின் கண்களும் உடைப்பெடுத்தன.

"அம்மா... அப்பா பயணத்தாலை வருவார். அவரோடை நாங்கள் கோயிலுக்குப் போவம். அப்பா வந்து சயந்தனின்ரை தேப்பன் அவனுக்கு மடியிலை இருத்திச் சாப்பாடு தீத்திவிடுகிற மாதிரி எனக்கும் தீத்திவிடுவார் எண்டு சொன்னியள். வினோதரன்ரை அப்பா அவனுக்கு கதைசொல்லுற மாதிரியும், புத்தகம் படிப்பிச்சுக்குடுக்கிற மாதிரியும் எங்கடை அப்பாவும் சொல்லித் தருவார் எண்டியள் அப்பா வரேக்கை எனக்குச் சின்னச் சின்ன விளையாட்டுச் சாமான்கள், பற்,

போல் எல்லாம் வாங்கியருவர் எண்டியள். எல்லாம் பொய்தான்".

"அழாதை ராசா அப்பா வருவார்"

வார்த்தையாக வருவதற்கு அவளிடம் இதைத்த விர வேறொன்றும் இல்லை.

"பார்த்தியளே அம்மா பேந்தும் பொய்தானே சொல்லுறியள் என்ரை அப்பா செத்துப் போனாராம் எல்லாரும் கதைக்கினம். ரம்மியன் சொன்னவன். என்னை ரம்மியன் தன்ரை வீட்டை கூட்டிக் கொண்டு போனவன். அவன்ரை அப்பா வெளிநாட்டாலை இப்பதான் வந்தவர். என்னை ஆற்ரை மோன் எண்டு கேட்டவர். நான் அப்பான்ரை பேரைச் சொன்னன். பிறகு நேற்றுப் பள்ளிக்கூடத்திலை வைத்து ரம்யன் சொன்னவன் அவன்ரை அம்மா அவன்ரை அப்பாவுக்கு சொன்னவவாம் என்ரை அப்பாவை சுட்டுப்போட்டு எங்கையோ ஒரு வெளியிலை தாட்டுப் போட்டினமாம்."

அவனுக்கு வார்த்தைகள் வரமறுத்தன அழுகை பொத்துக்கொண்டு வந்தது.

"எனக்குக் கதை சொல்லித் தர அப்பா இல்லை. எனக்குப் பாட்டுச் சொல்லித்தர அப்பா இல்லை. பள்ளிக்கூடத்துக்குச் சைக்கிளிலை கொண்டு போகவும் அப்பா இல்லை...கோயிலுக்குக் கொண்டு போகவும் அப்பா இல்லை... அப்பா செத்துப்போனாராம்..."

வீரிட்டு அழத்தொடங்கினான் சஞ்சீவன். தாய் அவனை வாரியணைத்துக் கொண்டு தானும் அழுதாள். இந்த ஆறு வருடங்களும் பொய்யாகிவிட்டதனை

எண்ணிப் புலம்பினாள். அவனை இனியும் ஏமாற்ற முடியாததை உணர்ந்தாள் கணவனின் படத்தை அண்ணார்ந்து பார்த்தாள். அவளது கண்ணீர் பொல பொலவென சஞ்சீவனின் தலையை நனைத்தது. சஞ்சீவன் நிமிர்ந்து பார்த்தான். அம்மா அழுகிறாள்...

அழுகை பற்றி அவன் அறிந்த காலத்திலிருந்து அம்மா அழுததை காணாதவன் அவன். தன் பிஞ்சுக் கரங்களால் அம்மாவின் கண்களை துடைத்து விட்டான்.

தாமரை, செப்டம்பர் 2004



அநீதியான மேலாண்மைகளுக்குள் உயிரழியும்
பிஞ்சு மனங்களின் குரலாக, இத் தொகுப்பின் சிறுகதைகள்
யாவும் சமூகத்தின் ஆத்மாவை உலுக்கி நிற்கின்றன.

ISBN 978-955-7740-00-3

ஆகாயம் பதிப்பகம், இலையாணன்